21

தொகுதி 5.] 1926ளு செப்டம்பர்மீ 1வ [பகுதி 8.

# மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்.



OFFICE OF THE REGISTRAR ... 1926 ... M

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

# மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை நாவல்.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கெனவே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922வூ பிப்ரவரிமீ 1வ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவு பெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவழத்தீவு" "ஞான செல்வாம்பாள்" என்ற நாவல்கள் முடிவுபெற்று "அற்புத மர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" என்ற நாவல் தொடங்கப்பட்டிருக்கிறது. முடிவான மூன்று நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டுமென்றி அவற்றின் சஞ்சிகைகள் கிடையா. "அற்புத மர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" வேண்டியவர்கள் சந்தாதாரராகச்சேர்ந்து சஞ்சிகை பெற்றுக்கொள்ளவேண்டும். இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. இதில் இப்போது வெளிவரும் ஷை நாவல் அடுத்த 1927வூ ஜனவரிமீ த்துடன் 560-பக்கங்களுக்குள் முடியும். அதுவரை இதற்கு இந்த ஏழுமாதங்கட்கும் சந்தா ரூ. 1-8-0 ஒன்றரைதான். வெளிநாட்டிற்கு ரூ. 2—0—0 அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ இதற்கு முன் பணம் அனுப்பினால் ரூ. 1—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூ. 1—13—0 ஆகும்.

1926வூ பிப்ரவரிமீ முதல் மனமோகினிக்குச் சந்தாதாரராகச் சேர்ந்திருப்பவர்களுக்கு இந்நாவல் அச்சந்தாவிலேயே கிடைக்கும். மனமோகினிக்கு வருஷசந்தா ரூ. 2—8—0
வெளிநாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வந்திருக்கும் புஸ்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | 0 |
| பவளத்தீவு 2 பாகமும் | ,, | 3 | 0 | 0 |
| ஞான செல்வாம்பாள் 5 பாகமும் | ,, | 9 | 10 | 0 |

மானேஜர், "ஆனந்த நிலையம்"
தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

சற்றுதூரம் சென்றபோது அங்கு ஒரு அறை யிருந்தது. அதன் கதவும் திறந்திருந்தது. கங்காதரன் கையிலிருந்த இராந்தலை உயரத் தூக்கியபடி முன்னே நுழைந்து வாயிற்படியைக் கடந்ததும் தட்டென்று நின்றான். அங்கு கீழே தரையில் நீள இரத்தம் ஒழுகியதுபோ லிருந்தது. இரத்தத்தைமிதித்த காலடிகள் உள்ளறையிலிருந்து வெளி வந்து தாழ்வாரத்தின் வழியாய்ச் சென்றதுபோல் காணப் பட்டன. நால்வரும் அதை யுற்று நோக்கியபின் உள்ளே யிருக்கும் அறையின் கதவு மூடப்பட் டிருப்பதைக்கண்டு அதைத்திறந்து வெளியில் நின்றார்கள். கங்காதரன் காலியாகவிருந்த அந்த அறையின் மத்தியில் ஒரு பிரம்மாண்டமான மனிதனுடைய உருவம் கீழே விழுந்து கிடப்பதைக் கண்டான். அவன் சிவந்த முகமும் பருத்துத் தடித்த பெரிய தேகமு முடையவன். அவன் சிரசைச் சுற்றி வட்டமாய் இரத்தம் தோய்ந்திருந்தது. அவன் தேகமே பெரிய வட்டமாய் ஒழுகியிருக்கும் இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்தது. அவன் முகத்தில பிராணவஸ்தையால் உண்டான பயங்கரமான விகாரம் இருந்தது. அவன் காங்கள் அகன்று கிடந்தன. அவன் மல்லாக்க விழுந்து கிடந்தான். அவனுடைய அகன்ற நெஞ்சில் ஒரு நீளமான கத்தி குத்தப்பட்டிருந்தது. அதன் அலகு அடிவரையில் அவன் தேகத்தில் பாய்ந்திருந்தது. வெள்ளைக் கைப்பிடிமட்டுமே வெளியில் தெரிந்தது. அம்மனிதன் ஒரு பிரம்மாண்டமான இராக்ஷதன்போ லிருந்தாலும் அவன் மண்டையில் விழுந் திருக்கும் ஒரே அடி அவனை யுடனே கீழே வீழ்த்தி விட் டிருக்கவேண்டும். அந்த அடி அத்தகைய பலமான அடியாக விருந்தது. அவனுடைய வலதுகையினருகில் ஒரு பெரிய பயங்கரமான ஈட்டி விழுந்து கிடந்தது. அது இருபக்கங்க



18650

ளிலும் கூருடையதாய் மான் கொம்பில் கைப்பிடியுடைய தாயிருந்தது. அதனருகில் ஒரு கறுப்பு விரற்சட்டை யிருந்தது.

மேற்கு நாட்டிலிருந்துவந்த துப்பறியும் இரவணப்பன் அம்மனிதனை யுற்றுநோக்கியதும் "ஓ கடவுளே அதிர்ஷ்டனுகிய கோராக்கந்தனே "யாரோ நம்மிலும் முந்திக்கொண்டார்கள்" என்ருன்.

மற்ற பேரெல்லாம் சவத்தைக் கவனித்துக்கொண்டிருக்கையில் ஆனந்தஸிங் சாளரத்திலிருந்த மெழுகு வத்தி தீபத்தைக்கண்டதும் அதனருகிற் சென்று "ஆ இதோ விளக்கு" என்று கூறிக்கொண்டு அதையெடுத்து சாளரத்தில் குறுக்கும் நெடுக்குமாக இரண்டு மூன்று முறை ஆட்டிக் காட்டியபின் அதையணைத்துக் கீழே யெறிந்துவிட்டு, "இது உதவிசெய்யு மென்று எண்ணுகிறேன்" என்ருன். மற்றவர்கள் சவத்தைக் கவனித்துக்கொண் டிருக்கையில் அவன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான்.

கங்காதரன் "இதென்ன விவகாரம்? நீ என்ன செய்கிருய்?" என்ருன். ஆனந்தஸிங் அவனை நோக்கி "நீ, மூன்று பேர் இந்த வீட்டை விட்டு வெளியிற் சென்றதாகக் கூறினை. அப்போது நீங்கள் வெளியிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தீர்கள். அம்மூவரில் ஒவ்வொருவனையும் நன்ருய்க் கவனித்தீர்களா?" என்ருன். கங்காதரன் "ஆம் நன்ருகவே கவனித்தேன் அதிற் சந்தேகமே யில்லை" என்ருன்.

ஆனந்தஸிங்:—அவர்கள் ஒருவன் சுமார் முப்பது வயதுடையவன்; கறுத்த தாடியுடையவன்; நடுத்தரமான உயரமுடையவன்; அப்படிப்பட்டவன் இருந்தானு?

கங்காதரன்:—ஆம், ஆம்; இருந்தான் இருந்தான். அவன் ருன் கடைசியில் வெளியில் வந்தவன்.

ஆனந்தஸிங்:—அவன்றான் உங்களுக்கு வேண்டிய ஆள். அவனைப் பற்றிய அடையாளங்களை நான் கூறக் கூடும். இங்கே அவனுடைய காலடிக் குறிகள் திடமாயிருக்கின்றன. இது உங்களுக்குப் போதும்.

கங்காதரன்:—இருந்தாலும் இது போதாது. இலக்ஷக் கணக்கான ஜனங்களிருக்கும் இந் நகரத்தில் அத்தகைய ஒருவனை யறிந்து கொள்வது சுலபமல்ல. அதே அடையாளங்களை யுடைவர்கள் பல பேரை யிங்கு காணலாம்.

ஆனந்தஸிங்:—"அது உண்மைதான். அதனாற்றான் உங்களுக்கு உதவி யுண்டாகும் என்று இந்தம்மாளை யிங்கு வரச் செய்தேன்" என்றான்.

ஆனந்தஸிங் கூறியதைக் கேட்டு யாவரும் மிக்க வியப்போடு திரும்பிப்பார்த்தார்கள். அங்கு வாயிற் படியில் ஒரு உயரமான அழகியமாது வந்து நிற்பதைக் கண்டார்கள். அவள் தான் வரதம்மாள் வீட்டில் வந்திருந்த மர்மமான மாது. அவள் முகம் சவம்போல் வெளுத்திருந்தது. அவள் மிக்க கலவரமும் திகிலுமடைந்த தோற்றத்தோடு பயங்கரமான பார்வையாய் அங்கு கீழேகிடக்கும் உருவத்தை நோக்கிக்கொண்டே நடுக்கத்தோடு மெதுவாய் உள்ளே வந்தாள்.

அம்மாது அச்சவத்தை நோக்கியதும் முதலில் "அய்யோ பாவிகளே! அவரைக் கொன்று விட்டீர்கள்" என்று அலறிக் கூவினாள். அச் சத்தத்தைக் கேட்ட யாவரும் நடுங்கிவிட்டார்கள். ஆனால் அவள் மறுவினாடி மூச்சுத் திணரி பாய்ந்து குதித்து மிக்க சந்தோஷத்தால் கூச்சலிட்டு அறையில் சுற்றிச் சுற்றிக் காங்களைத் தட்டிக் கொண்டு நடனம் புரிந்தாள். அவள் நேத்திரங்கள் சந்தோஷத்தால் ஜொலித்தன. அவள் தன் தேச பாஷையில் பல சந்தோஷ வார்த்தைகள் கூறினாள். அத்தகைய மாது அவ்வாறு சந்

தோஷத்தால் வெறிகொண்டு குதிப்பது மிக்க வியப்பையும் பீதியையும் அளித்தது.

பிறகு அவள் இவர்களை நோக்கி, "ஆ! நீங்கள்! நீங்கள்! போலீஸ்காரர்கள் நீங்களே. நீங்கள் கோராக்கந்தனைக் கொன்று விட்டீர்கள். அப்படித் தானே?" என்றாள்.

கங்காதரன்:—"ஆம். நாங்கள் போலீஸ்காரர்கள் தான்" என்றான்.

அதன்மேல் அவள் சுற்று முற்றும் பார்த்துவிட்டு "ஓ ஜகதீசா எங்கே? அவர் என் கணவர். நான் அவர் மனைவியாகிய இலக்ஷ்மிபாய். நாங்களிருவரும் நவீன புரியிலிருந்து வந்தோம். அவர் எங்கே? என் கணவர் எங்கே? ஒரு நிமிடத்திற்கு முன் இச்சாளரத்தினருகிலிருந்து என்னை யுடனே வரும்படி யழைத்தாரே. அதனால்தான் நான் ஓடி வந்தேன்" என்றாள்.

ஆனந்தஸிங்:—"அம்மா! உன்னை வரும்படி யழைத்தது அவரல்ல" என்றான்.

இதைக் கேட்டதே அம்மாதிற்குண்டான வியப்பிற்கு ஓர் அளவே யில்லை. அவள் மிக்க வியப்போடு கலவரமும் பீதியுங்கூட வடைந்து "நீரா? நீரா? நீர் எப்படி யழைக்க முடியும்?" என்றாள்.

ஆனந்தஸிங்:—"அம்மா! உங்கள் இரகசிய பாஷை யெனக்குத் தெரியும். ஆகையால் எந்த வார்த்தையைக் கூறினால் நீ யுடனே வருவாயோ அவ்வார்த்தையைக் நான் தீபக்குறிகளால் காட்டினேன்." என்றான்.

அதைக் கேட்ட அம்மாது அவனைப் பீதியோடு நோக்கி,

"அய்யா! தாங்கள் எவ்விதமாய் இதை யறிந்துகொண்டீரோ எனக்கு விளங்கவில்லை. இந்தப் படுபாவி கோராக்கந்தன் எப்படி யிங்கு வந்தான். எப்படி..." என்று அதற்கு

மேற் கூருமல் தட்டென்று சற்று நிதானித்தாள். திடீ லென்று அவள் முகத்தில் ஒரு பிரகாசம் உண்டாகியது. ஆ! இப்போது நான் தெரிந்து கொண்டேன். என் ஆண் மையுள்ள கணவர் வீரத்தன்மையோடு என்னை மிக்க ஜாக்கி ரதையாய் இப்படுபாவியிடமிருந்து காப்பாற்றியவர். தன் உயிரை இலட்சியம் செய்யாமல் என் மானத்தைப் பாது காத்தவர் அவரே. பரமசண்டாளனுகிய இந்த இராக்ஷத பயலைச் சங்காரம் செய்தார். ஆ! என்ன மகிழ்ச்சி என் கணவரே! எத்தகைய மாது தான் உம்மை வாயாரப் புகழ மாட்டாள். என் பெருமையே பெருமை" என்ருள்.

---

## 4-வது அத்தியாயம்

இலக்ஷ்மிபாய் தன் கணவனை கோராக் கந்தனைக் கொன்ருன் என்று கூறிய மொழிகளைக் கேட்ட கங்காதரன் என்ற இன்ஸ்பெக்டர், அவளை நோக்கி "அம்மா! நீ யாரென்ருவது, உன் விஷயங்க ளென்னவென்ருவது, நீ யிக்கொலையில் எப்படிச் சம்பந்தப்பட்டா யென்ருவது எனக்கு இன்னும் தெரியாது. ஆயினும் நீ கூறிய வார்த்தை களால் நான் உன்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து சென்று சட்டப்படி யுன்னுடைய வாக்குமூலத்தை வாங் கிக்கொள்ள வேண்டும்." என்ருன்.

ஆனந்தஸிங்:—"கங்காதரம்! சற்றுபொறு. நமக்கு இதைப் பற்றிய விவரங்களை யறிய எவ்வளவு ஆவலாக விருக் கிறதோ, அவ்வளவு ஆவலோடேயே இம்மாது அவற் றைக்கூற விரும்புகிருள் என்று நான் கருதுகிறேன்." என்று கூறிவிட்டு,

அம்மாதை நோக்கி "அம்மா! இப்போது நீ கூறிய விஷயங்களால் இம்மனிதனைக் கொலைசெய்த குற்றத்திற்காக

உமது கணவன் சிறைசெய்யப்படுவார். நீ கூறியவைகளே ருசுக்களாக எடுத்துக்கொள்ளப்படும். ஆனால் உன் கணவன் இவனைக் கொல்லவேண்டுமென்று எண்ணி யிப்படிச் செய்யவில்லையென்றும், அவர் இதன் காரணங்களையும் விவரங்களையும் ஒளிக்காமல் வெளியிடுவார் என்றும் உனக்குப் புலப்படும் பட்சத்தில் நீ இதைப்பற்றிய எல்லா விவரங்களையும் ஆதியோடந்தமாய்க் கூறுவது அவருக்குப் பேருதவி செய்ததாகும்" என்றான்.

ஆனந்தஸிங் சட்டத்தை யொருபக்கம் விட்டுவிட்டு மனச்சாட்சிக்குத் திருப்தியாய் நடப்பவன். ஆதலால் அத் துஷ்டனைக் கொன்றதாலேயே இவள் கணவன் தண்டனையடையவேண்டுமென்று அவன் மனதிற்குப் புலப்படவில்லை. அத்துஷ்டன் ஏதோ பெரிய அக்கிரமம் செய்திருப்பான். ஆகையால் அதை வெளிப்படுத்தி இவள் கணவனைக் காப்பாற்றிவிடவேண்டும் என்பதே அவன் நோக்கம். அதற்காகவே அவன் யிம்மாதிரி கூறினான்.

அவன் கூறியதைக்கேட்ட இலக்ஷ்மிபாய் "அய்யா இந்த இராக்ஷசப்பேய் மடிந்தொழிந்தபடியால் இனி நான் உண்மையை வெளியிட ஒருவருக்கும் அஞ்சவேண்டியதில்லை. இச்சண்டாளனுடைய காரியங்களைக் கேட்டால் இப்படிப்பட்டவனைக் கொன்றதற்காக என் கணவரை யெந்த நியாயாதிபதியும் தண்டிக்க மாட்டார். ஆனால் அதற்குப் பதில் அவரைப் புகழ்ந்து பரிசளிப்பார்கள்" என்றாள்.

ஆனந்தஸிங்:—"அப்படியாயின் நாம் இவையாவும் நமது ஆட்களின் காவலில் இப்படியே விட்டுவிட்டு இந்தம்மாளின் அறைக்குச் சென்று இவர்கள் கூறும் சங்கதியைக் கேட்போம்" என்றான்.

கங்காதரன் அவ்வாறே சம்மதிக்க அனைவரும் புறப்

பட்டுச் சென்றார்கள். அரைமணிநேரத்திற்குள் யாவரும் இலக்ஷ்மீபாயின் அறையில் உட்கார்ந்தார்கள். அம்மாது பின்வருமாறு தனது அதிசயமான சரித்திரத்தைக் கூறத் தொடங்கினாள்:—

"நான் இளவநாட்டில் பாஸரை என்ற ஊரில் பிறந்தவள். என் தந்தை அங்கு பிரசித்திபெற்ற வக்கீலாகவும் நகரசங்கத்தலைவராகவு மிருந்தார். ஜகதீசன் என்பவர் என் தந்தையிடம் வேலைக் கமர்ந்தார். அவருடைய அழகையும், நற்குணங்களையும், நாணயமும் இனிப்புமாகிய சம்பாஷணையையும் கண்டு நான் அவர்மேல் காதல் கொண்டேன். ஆனால் அவர் செல்வமாவது வேறு எவ்வித ஆஸ்தியாவது இல்லாதவர். இதனால் என் தந்தை நான் அவரை மணம் புரியக் கருதலாகாதென்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார். என்செய்வது? காதலுக்கு அணையுமுண்டோ? நானும் என் காதலரும் பேசாமல் அதைவிட்டு ஓடிவிட்டோம். நான் கைந்துநாட்கள் பிரயாணம் செய்தபின் ஒரு ஊரில் தங்கி அங்கு இருவரும் மணம் செய்துகொண்டபின், என்னிடமிருந்த நகைகளை விற்று அதனால் கிடைத்த பணத்தைக் கொண்டு மேற்குநாட்டின் தலைநகரமாகிய நவீனபுரி போய்ச் சேர்ந்தோம். அதுமுதல் அங்கேயே வசித்துக்கொண்டிருந்தோம். [அவர்கள் மதாசாரப்படி கலியாணத்திற்காகச் சடங்குகளொன்றுமில்லை. சுற்றத்தார் வந்திருக்கவேண்டுமென்ற நியதியில்லை. தம்பதிகள் இருவரும் ஒரு குருவுமிருந்தால் போதும். சாக்ஷிமாத்திரம் ஒருவர் இருக்கவேண்டும்; அவ்வளவே. அதனால் கள்ளத்தனமாய் மணம் புரிந்துகொள்வது பிள்ளைகள் விளையாட்டுபோல்.]

முதலில் நல்ல அதிஷ்டம் எங்களுக்கு அனுகூலமாகவிருந்தது. என் கணவர் எங்கள் நாட்டுப் பெரிய மனிதர் ஒருவருக்கு ஒருசமயத்தில் நல்ல உதவிசெய்தார். அதா

வது அப்பெரிய மனிதர் ஒருசமயம் பாங்கியிலிருந்து ஐயா யிரம் பவுன் வாங்கிக்கொண்டு இரவில் வீட்டைநோக்கி வந்துகொண்டிருந்தபோது மூன்றுபேர் முரட்டுத்தனமான கள்ளப்பயல்கள் அவரை மடக்கிக்கொண்டார்கள். அச் சமயம் தற்செயலாக அவ்வழி வந்துகொண்டிருந்த என் கணவர் தமது உயிருக்குத் துணிந்து அவரைக் காப்பாற்றி னூர். அதுமுதல் அவர் இவர்மேல் மிக்க அன்புவைத்தார். அவர் பெயர் எப்போதும் எங்களால் மறக்கப்படுவதில்லை. தினகாம்பிள்ளையென்ற அவர் பிரசித்திபெற்ற "தினகாம் சம்பு" என்ற வர்த்தக சங்கத்தின் பெரிய பாகஸ்தராவர். அவர்கள் நவீனபுரியிலுள்ள பழைய வியாபாரிகளில் முதன் மையானவர்கள். தினகாம்பிள்ளையின் கூட்டாளியாகிய சம்பு என்பவர் வியாதியஸ்தர். ஆகையால் தினகாம்பிள்ளையே வர்த்தக விஷயம் யாவும் நடத்திவந்தார். அவர்கள் வர்த் தகசாலையில் ஐந்நூறுக்கு மேற்பட்ட ஆட்கள் வேலை செய் கிறுர்கள். தினகாம்பிள்ளை என் கணவருக்குத் தொழிற்சாலை யில் ஒரு இலாகாவில் தலைமை உத்தியோக மளித்தார். அவருக்கு மணமில்லை. அவர் என் கணவரைத் தமது புதல் வரைப்போல் பாவித்து வந்தார். ஆகையால் நாங்களிரு வரும் அவரை எங்கள் சொந்தத் தந்தையைப்போலவே நேசித்து வந்தோம். நாங்கள் ஒரு சிறுவீடு ஏற்பாடு செய்து கொண்டு மிக்க சந்தோஷமாகவும் நிம்மதியாகவுமே இல் வாழ்க்கையைத் தொடங்கினேம். எங்கள் ஆரம்பம் மிக்க திருப்திகாமாகவும் நம்பகமாகவு மிருந்ததால் சீக்கிரத்தில் க்ஷேமமான மேல் நிலைக்கு வருவோமென்று நம்பினேம். அந்தோ அதற்கிடையில் கார்காலத்து கரியமேகம்போல் சனியன் வலியவந்து எங்களைப் பிடித்துக்கொண்டது.

எவ்வாறெனின், ஒருநாள் இரவு என் கணவர் தம் வேலையினின்று திரும்பிவந்தபோது எங்கள் நாட்டான்

ஒருவனைக் கூட அழைத்து வந்தார்; அவன் பெயர்தான் கோராக்கந்தன். அவனும் எங்கள் ஊரானே. நீங்கள் அவன் சவத்தைக் கண்டீர்கள். அவன் பிரம்மாண்டமான இராக்ஷத சொரூப முடையவன். அவன் தேகமட்டுமேயல்ல. அவன் விபாங்கள் யாவுமே பயங்காமானவைகள். அவன் தொண்டை இராக்ஷசன் தொண்டை. அவன் வீட்டில் பேசினால் அவன் குரல் பேரிடி யிடிப்பதுபோல் மிக்க பயங்காத்தை யுண்டாக்கியது. அவன் பேசும்போது எனக்கு நடுக்க முண்டாயிற்று. அவன் எழுந்து நின்று காங்களை அகல விரித்துக்கொண்டு பேசத்தொடங்கினால் அறையில் இடம் போதாது. அவன் கோபம், பார்வை, பேச்சு, நடை யாவும் பயங்கரமான இராக்ஷசத்தன்மையாகவே யிருந்தன. அவன் சாதாரணமாய்ச் சம்பாஷிப்பதே ஒருவரைக்கொன்று விட ஆத்திரமாய்க் கூறுவதுபோலிருக்கும். ஆகையால் அவன் எதிரிலிருப்போர் திகிற்பட்டு பேசாமல் மௌனமாக விருக்கவேண்டியதே. அவன் பேசும் வார்த்தைகள் அக்னி யாறு கொழுந்துவிட்டு எரிந்துகொண்டே ஓடுவதுபோ லிருந்தன. அவன் கண்கள் கொள்ளிக்கட்டைகள் எரிவது போல் எதிரிலிருப்போரை யொடுங்கிவிடச்செய்யும். அத்தகைய கொடிய சண்டாளன் மடிந்ததற்காக நான் கடவுளை வாழ்த்துகிறேன்.

அவன் பிறகு அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வரத் தொடங்கினான். எனக்கு அவன் வருவதால் எள்ளளவேனும் மனது நிம்மதியாயில்லை. ஏதோ பெரிய ஆபத்து வரும் என்று தெரிந்ததுபோல் பீதியாயிருந்தது. அதோடு என் கணவருக்கும் அவன் வருவதால் மனதில் வியாகூலமே யுண்டாகியிருப்பதாக எனக்குப் புலப்பட்டது. என் கணவன் பாபம் பீதியோடு உட்கார்ந்து அவன் கூறுவதையெல்லாம் கேட்டுக்கொண்டிருப்பார். அவர் என்னிடம் ஒன்றும் கூறு

விடினும், அவர் மனதில் சற்றும் நிம்மதியின்றியவர் மிக்க வியாகூலத்தோடிருக்கிறார் என்றுமட்டும் என் மனதிற் பட்டது.

நான் முதலில் இது அவன் சகவாசத்தில் இவருக்கிருக்கும் வெறுப்பாலேயே யென்று கருதினேன். பிறகு போகப் போக என் கணவருக்கிருக்கும் கலக்கம் வெறுப்பால்மட்டுமல்லவென்றும் அதைவிட வேறு ஏதோ மர்மமான விவகார மிருக்கவேண்டுமென்றும் என் புத்திக்குப் புலப்பட்டது. அவர் மனதில் ஏதோ மிக்க இரகசியமான பெரும்பயம் இருப்பதுபோல் தெரிந்தது. அவர் முகத்தில் பீதி-பெரும்பீதி-அடக்கமுடியாத பீதியிருந்தது. அன்றிரவு நான் என் கணவனுடைய இரு தோட்களையும் பற்றிக்கொண்டு "தயவுசெய்து என்னிடம் எதையும் மறைக்காமல் கூறும்; இம்மனிதனுக்குத் தாங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்? என்னிடம் தயவுசெய்து கூறும் என்று வேண்டினேன். அதன்மேல் அவர் கூறினார்.

அவர் கூறிய சங்கதியைக் கேட்டபோது என் மனம் ஸ்தம்பித்து விட்டது. என்னை மணம் புரியுமுன் ஒரு காலத்தில் என் கணவர் மிக்க நிசாதாவான நிலைமையிலிருந்தார். அச்சமயம் அவருக்கு ஒருவரும் உதவியில்லை. அப்போது அவர் மனம் சொல்லொணாத கலக்கத்தி லிருந்தது. அத்தகைய சமயத்தில் எவனும் உதவியை யெதிர்பார்ப்பது சுபாவம். அப்போது அவர் 'சிகப்பு வட்டம்' என்ற சங்கத்தில் சேர்ந்து கொண்டார். ஆரம்பத்தில் அதன் விவகாரம் இத்தன்மையான தென்று அவருக்குத் தெரியாது. அதில் சேர்கிறவர்கள் மிக்க பயங்கரமான நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டும். அதில் செய்யப்படும் சத்தியங்களோ நெஞ்சு நடுங்கத் தக்கவை. ஆனால் ஒரு மனிதன் அந் நிபந்தனைகளுக்குச் சம்மதித்துச் சத்தியம்

செய்து விட்டானே, பிறகு அவன் பிராணனுள்ள மட்டும் அதிலிருந்து தப்ப முடியாது.

நாங்கள் மேல் நாட்டிலுள்ள நவீன புரிக்குப் போய் விட்டபோது, என் கணவர் அந்தப் பயங்கரமான நிபந்தனைகளிலிருந்து அடியோடு தப்பித்துக் கொண்டோம் என்று எண்ணிக் கொண்டார். ஆனால் ஒரு நாள் அவர் நவீனபுரி வீதியின் வழியாய் வந்துகொண் டிருக்கையில் அச்சங்கத்தில் சேர்ந்த முக்கியமான ஆசாமியாகிய இந்தக் கோராக்கந்தனைக் கண்டதே அவர் மனம் திடுக்கிட்டு நடுக்கமடைந்தார். அவனே யச்சங்கத்தில் அவரைச் சேர்த்தவன். இளவல நாட்டின் தென்பாகத்தில் எமன் என்று பெயரெடுத்தவன். அவ்வூர் போலீஸாருக்குப் பயந்து மேற்கு நாட்டிற்கு ஓடிவந்து விட்டான். அங்கு வந்ததும் அவ்விடத்தில் தன் சிகப்பு வட்டச் சங்கத்தைத் தாபிக்கத் தொடங்கினான். குறித்த ஒரு தினத்தில் ஒரு இடத்தில் அச்சங்கம் கூடுகிறதென்றும் என் கணவர் அதற்குக் கட்டாயம் வரவேண்டுமென்றும் அவருக்கு ஒரு கட்டளை யளிக்கப்பட்டது. அதை யவர் எனக்குக் காட்டி மேற் கண்ட விஷயங்களை யெல்லாம் கூறினார்.

இச்சங்கதி எங்களுக்குப் பெருந்திகிலை யுண்டாக்கி விட்டது. ஆனால் எங்களைப் பிடித்த சனியன் இதோடு ஒழியவில்லை. கோராக்கந்தன் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து கொண்டே யிருந்தான். வர வர அவன் அதிகமாய் என்னிடம் சம்பாஷிக்கத் தொடங்கினான். அவன் வார்த்தைகள் என் கணவருக்கே கூறப்பட்டாலும் அத்துஷ்டனுடைய கண்கள் மட்டும் என் மேலேயே யிருந்தன. இதனால் எனக்குத் திகிலும் வியாகூலமு மதிகமாய் விட்டன. ஒரு நாள் அவன் என் கணவர் தமது தொழிலிலிருந்து வருவதற்கு முன்பே மாலைப்போது எங்கள் வீட்டிற்கு வந்தான். அன்று அவன்

துணிகரமாய்த் தன் காதலை வெளியிட்டதோடு நிற்காமல் பாய்ந்து வந்து என்னை முரட்டுத் தனமாய் ஆலிங்கனம் செய்து தன் கூட வோடிவந்து விடும்படி கூறினன். நான் என் பலம் முழுமையும் உபயோகித்து அவன் பிடியிலிருந்து திமிரிக் கொள்ள முயன்றேன். அச்சமயம் என் கணவர் உள்ளே வந்தார். அவர் அத்துஷ்டன் செய்கையைக் கண்டதும் அவன்மேல் வீழ்ந்து தாக்கினர். அவன் ஒரே அடியில் என் கணவரை மூர்ச்சை யடையும்படி வீழ்த்தி விட்டு உடனே வெளியிற் சென்றான். அன்று முதல் எம்மையே கொடிய விரோதி யாக்கிக் கொண்டோம்.

சில நாட்கள் கழித்து என் கணவர் கோராக்கர்தனையும் அவன் கூட்டாளிகளையும் சந்திக்க நேர்ந்தது. அன்று அவர் வீட்டிற்கு வந்தபோது அவர் முகத்திலிருந்த கலவரத்தையும் திகிலையும் நோக்கியபோது ஏதோ மிக்க பயங்கரமான சம்பவம் நடந்திருக்கிற தென்று புலப்பட்டது. ஆயினும் அவ்வளவு அக்கிரமமும் மனம் கொதிக்கத்தக்கதுமான விஷயம் நேரிட்டிருக்குமென்று நான் எதிர் பார்த்ததே யில்லை என்ன சங்கதி யெனில் இத்துஷ்ட சங்கத்தார் செலவிற்குப் பணம் வேண்டி யிருந்தால் நவீனபுரியில் வசிக்கும் ஏராளமான எங்கள் நாட்டாரில் செல்வந்தராகவுள்ள ஒருவரைப் பயமுறுத்திப் பணம் உதவி செய்யும்படி கேட்பது வழக்கம். அதேப்படி எனக்கும் என் கணவருக்கும் தந்தை போன்றவரும் மகா உத்தமரும் எங்கள் உபகாரியுமாகிய தினகரம் பிள்ளைக்கு ஒரு கடிதம் அனுப்பினர்கள். அதன் தலைப்பில் சிகப்பு வட்டம் குறிக்கப்பட் டிருந்தது அதில் "தினகரம் பிள்ளைக்குச் சிகப்பு வட்டச் சங்கத்தின் காரியதரிசியிதனல் அறிவிப்பது என்ன வெனில், இக்கடிதம் கண்ட 48-மணிநேரத்திற்குள் நீர் இச்சங்கத்திற்குப் பத்தாயிரம் பவுன் அளிக்க வேண்டும். அந்தப் பணம் எவ்வாறு சங்கத்

திற்கு வந்து சேரவேண்டுமெனில், நகரத்தின் வடபால் வேதபுரிக்குச் செல்லும் பாதையில் இரண்டாவது மைல் கல்லி னெதிரில் ஒரு சிறு காலி வீடிருக்கிறது. இன்று மாலை 6-மணிக்காவது நாளை மாலை 6-மணிக்காவது அத் தொகையை நீரே யெடுத்து வந்து அவ்வீட்டில் வைத்து விட்டுச் செல்லவேண்டும். நீர் தனியே வரவேண்டும். இச் சங்கதியை யொருவருக்குக் கூடத் தெரிவிக்கலாகாது. இந்த நிபந்தனைகளில் ஒன்றுக்கேனும் தவரி நடந்தால் உமது பிராணனை யிழக்க நேரிடும் என்பதைக் கட்டாயமா யறியவும்" என்று எழுதப்பட்டிருந்தது. தினகரம்பிள்ளை அவர்கள் பயமுறுத்தியதைச் சட்டை செய்யாததோடு அக்கடிதத்தைப் போலீஸாரிடம் ஒப்புவித்து விட்டார்.

அதற்காக அத்துஷ்டர் கூட்டங் கூடி அவருக்கு பயங் கரமான தீங்கிழைத்தால் மற்ற பேர்கள் பயப்படுவார்களென் றும், தாங்கள் கேட்கிறபடி பேசாமல் பணம் கொடுத்து விடு வார்கள் என்றும் சிந்தித்து அவர் வீட்டோடு அவரையும் வெடி குண்டா லழித்துவிட வேண்டுமென்று தீர்மானித் தார்கள். ஆனால் அக்கட்டளையை நிறைவேற்றுவதற்கு யாரை நியமிப்பது? அதற்காகச் சீட்டு போடுவ தென்று ஏற்பாடு செய்தார்கள். கோராக்கந்தனே சீட்டெடுத்தான். அவன் வேண்டுமென்று முன்னடியே செய்துவைத்த தந் திரமான சூதின்படி என் கணவர் பெயரே வந்தது. அந் தோ! தமக்கு உபகாரம் செய்த உத்தமர்க்கு இத்தகைய தீங்கிழைக்க அவர் மனம் சம்மதிக்குமா? அன்று இரவு முழு மையும் நாங்கள் இதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டும் ஒருவர்க் கொருவர் தைரியம் கூறிக் கொண்டும் இருந்தோம். மறுநாள் பொழுது விடிந்தது. மாலை அச்சண்டாளர் கட்டளை நிறைவேற்றப்பட வேண்டும். என்ன செய்வது? தினகரம் பிள்ளைக்குச் சரியாய் எச்சரிக்கை செய்துவிட்டு பிறகும் அத்

துஷ்டரால் அவருக்குத் தீங்கு நேராவண்ணம் போலீஸ் காரருக்கும் எல்லாச் சங்கதிகளையும் பற்றி அறிவித்துவிட்டு இரகசியமாய் ஊரைவிட்டுப் புறப்பட்டோம். அச் சங்கத்தின் கட்டளையை நிறைவேற்றுவிட்டால் அச்சண்டாளர்கள் அவர்களைக் கொல்வதோடு அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் தீங்கு செய்வார்கள்.

நாங்கள் அங்கிருந்து புறப்பட்டு வந்து விட்டாலும் எங்கள் எதிரிகள் எங்களை நிழல்போல் தொடர்ந்து வருவார்கள் என்பதை நாங்களறிவோம். கோராக்கந்தனுக்கு எங்கள் மேல் பிரத்யேக வஞ்சம் இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியும். அதிலும் அவன் ஈவிரக்கமென்பது சற்றுமின்றி எத்தகைய கொலை பாதகத்தையும் செய்யத்தக்கவன். இளவல நாட்டிலும் மேற்கு நாட்டிலும் அவன் கொலைச் செயல்கள் நிறைந்திருக்கின்றன. நாங்கள் இரண்டு மூன்று நாட்கள் முன்னாடி வந்து விட்டபடியால் என் கணவர் மிக்க தந்திரமாய் எனக்கு எவ்வித ஆபத்தும் நேராதபடி ஒரு இடம் பார்த்து என்னை வைத்தார். அவர் வெளியில் சுயேச்சையாகப் புழங்கிக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாயிருந்தது. ஏனெனில் அவர் இளவல நாட்டுப் போலீஸாருக்கும் மேற்கு நாட்டுப் போலீஸாருக்கும் சமாசாரம் அனுப்பிக் கொண்டிருக்கவேண்டும். அவர் எங்கு தங்கியிருக்கிறார் எப்படிச் சீவிக்கிறார் என்பது எனக்கே தெரியாது. எனக்கு வரும் சங்கதி யெல்லாம் கூடி தினசரி பத்திரிகை மூலமாக வருவதைத்தவிர வேறொன்றுமில்லை. ஒரு நாள் நான் சாளரத்தின் வழியாய் வீதியில் எட்டிப் பார்த்தபோது, இளவல நாட்டு மனிதர் இருவர் வீட்டை கவனிப்பதைப் பார்த்தேன். கோராக்கந்தன் என்ன தந்திரத்தாலோ எப்படியோ நான் மறைந்திருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து விட்டான் என்று தெரிந்து கொண்டேன். கடைசியாக என்

கணவர் நான் உங்களைச் சந்தித்த வீட்டின் சாளரத்தி லிருந்து எனக்குச் சமாசாரம் அறிவிப்பதாய்ப் பத்திரிகை யின் மூலம் தெரிவித்தார். நான் ஆவலோடு காத்திருந் தேன். கடைசியில் சமாசாரம் வரும்போது பார்த்தால், 'எச்சரிக்கை எச்சரிக்கை' யென்று மட்டுமே யிருந்தது. அதுவும் தட்டென்று நின்று விட்டது. மற்ற சங்கதி நீங்களறிந்தவைகளே. கோராக்கந்தன் நெருங்கி வந்து விட்டானென்பதை என் கணவரறிந்து கொண்டாரென்று இப்போது எனக்கு நன்ருய் விளங்குகிறது. அவன் வருகை யறிந்து என் கணவர் அவனைச் சந்திக்க ஆயத்தமாக விருந்த தற்காகக் கடவுளை வாழ்த்துகிறேன். நண்பர்களே இப் போது நாங்கள் சட்டத்திற்குப் பயப்படக் காரணமுண்டா வென்பதையும், எத்தகைய நியாயாதிபதியாயினும் எண்ணி றந்த படுகொலைகளைச் செய்த அச்சண்டாளனைக் கொன்ற தற்காக என் கணவரைத் தண்டிப்பாரா என்பதையும் அறி விக்கக் கோருகிறேன்" என்ருள்.

மேற்குநாட்டிலிருந்து வந்த துப்பறியும் உத்தியோகஸ் தஞன இரவணப்பன் என்பவர் இன்ஸ்பெக்டர் கங்கா தானை நோக்கி "கங்காதரம் இந்த விவகாரத்தைப் பற்றி உங் கள் நாட்டுச் சட்டம் எப்படியோ எனக்கு விளங்கவில்லை. எங்கள் நவீனபுரியும் அந்தக் கோராக்கந்தனைக் கொன்றதற் காக யாவரும் இந்தம்மாளுடைய கணவரைப் புகழ்ந்து அவ ருக்குப் பரிசளிப்பார்கள் என்பது நிச்சயம்" என்ருன்.

கங்காதான் இந்தம்மாளுக்காவது இவர்கள் கணவருக்கா வது இவ்விஷயத்தில் பயப்பட வேண்டிய காரணம் ஒன்று மில்லை யென்றே கூறுவேன். ஆனல் சட்டப்படி இந்தம் மாள் என் கூட ஸ்டேஷனுக்கு வந்து இச் சங்கதிகள் யாவும் எழுதி வைக்க வேண்டும். இவர்கள் கணவரும் அவ்வாறே

செய்து விடவேண்டும். பிறகு நீங்கள் மூவரும் உங்கள் இஷ்டப்படி செல்லலாம்" என்றான்.

மறுநாள் காலை யவ்வாறே இலக்ஷ்மி பாயும் அவள் கணவனும் நடந்த சங்கதிகள் யாவையும் அதிகாரிகளிடம் அறிவித்து விட்டு நவீன புரிக்குப் பிரயாண மானார்கள்.

## இரயில் பாதை மர்மக்கொலை

சிலநாட்களாக சரியான குற்றம் ஒன்றும் நடைபெறாததால் ஆனந்தஸிங்கின் மன வுற்சாகம் குறைந்திருந்தது. அவன் கடுகடுப்பான முகத்தோடு விசுவநாதனை நோக்கி "நண்பரே! பத்திரிகையில் உற்சாகமான சங்கதி யொன்று மில்லைபோலும்" என்றான்.

உற்சாகமான சங்கதியென்றால் அபூர்வமும் கண்டறியக்கூடாததுமான மர்மமுடைய குற்றம் என்பதே ஆனந்தஸிங்கின் அர்த்தம் என்று விசுவநாதனுக்குத் தெரியும். அவன் ஆனந்தஸிங் கேட்டதற்கு "அப்படி யொன்றும் பத்திரிகையில் காணப்பட வில்லை" என்றான்.

ஆனந்தஸிங்:—நமது நகரக்கள்ளர்கள் வரவர மந்தமாய் விட்டதுபோல் தெரிகிறது. இதோ சாளரத்தில் பார். இப்பனியால் மனிதர் செல்வது எப்படி நிழலுருவங்கள் செல்வதுபோல் காண்கின்றது. இத்தகையவேளையில் கொலைசெய்வோன் சற்றும் அச்சமின்றிநிம்மதியா யுலவுவான். என்போன்ற ஆள் கள்ளனாகத் திரும்பி விடாம லிருப்பது நமது நகரஜனங்கள் செய்த புண்ணியமே" என்றான்.

விசுவநாதன்:—"ஆம் இது உண்மையே" என்றான்.

ஆனந்தஸிங் மனப்பதைப்போடு வேட்டை யகப்

படாமல் அலையும் வேங்கைபோல் அறையில் முன்னும் பின்னும் திரிந்து கொண்டிருந்தான். சற்று நேரங்கழித்து சாளரத்தில் எதையோபார்த்துவிட்டு முகமலர்ச்சியோடு இதோ என்னமோ சமாசாரம் வருகிறது" என்ருன்.

இரண்டொரு நிமிடங்களில் வீட்டிலிருந்த வேலைக்காரி, ஒரு தந்தி வந்ததென்று கொண்டுவந்து கொடுத்தாள். ஆனந்தலிங் அதையாவலோடு பிரித்துப் பார்த்து கலகலவென்று நகைத்தான். பிறகு "சரிசரி. பிறகு என்னசங்கதி? என் தமையன் மோகனலிங் வருகிருர்" என்ருன்.

விசுவ:—அவர் வந்தாலென்ன? அதிலென்ன அதிசயம்?

ஆனந்த:—என்ன அதிசயமா? 'அவர் இங்குவருவது ஒரு இரயில் வண்டித்தொடர் ஒரு கிராமத்திற்குள் நுழைந்து செல்கிற மாதிரிதான். இரயில்வண்டி எப்போதும் அதற்கென்று அமைக்கப்பட்டிருக்கும் ஒரே பாதையிற்ருன் செல்லும். அதுபோலவே என் தமையனும், அவர் வீடு, துரைத்தன மந்திரிமார் காரியாலயம், அவர்கள் சேரும் சங்கக்கூடும் ஸ்தலம், இந்த விடங்களைவிட்டு அவர் வெளியில் செல்வதில்லை. முன்பு ஒருமுறை என் வாசஸ்தலத்திற்கு வந்தார். இப்போது என்ன விசேஷ மிருப்பதால் வருகிருரோ தெரியவில்லை" என்ருன்.

விஸ்வநாதன் "என்ன விஷயமென்று அவர் கூறவில்லையோ?" என்ருன்.

அதன்மேல் ஆனந்தலிங் அத்தந்தியை விசுவநாதனிடமளித்தான். அதில், "கோட்டூர் வாதப்பன் விஷயமாக உன்னைப் பார்க்கவேண்டும். உடனே வருகிறேன் மோகனலிங்" என்றிருந்தது.

அதை வாசித்தபின் விஸ்வநாதன் "இந்தக் கொட்டூர்

வாதப்பன் என்ற பெயரை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்ருன்.

ஆனந்தஸிங் "அதைப்பற்றி யெனக்குச் சற்றும் நினைப்பில்லே. என் தமையன் இப்படித் திடீலென்று வருவதே யெனக்கு மிக்க வியப்பாக விருக்கிறது. என் தமையன் விவகாரம் என்ன, அவர் தொழில் என்ன என்பது உனக்குத் தெரியுமா?" என்ருன்.

விசுவ :—"முன்பு ஒருசமயம் ஒரு துவிபாஷகன் விஷயமாய் நடந்த சம்பவத்தில் இவரைப்பற்றி யேதோ கொஞ்சம் கேள்விப்பட்டது கவனமிருக்கிறது. அவர் 'துரைத்தனத்தாரிடம் ஏதோ சிறிய உத்தியோகஸ்தராய் இருக்கிருர் என்று நீ கூறினையல்லவா" என்ருன்.

ஆனந்த:—"அப்போது நீ எனக்கு மிக்க பழக்கமில்லே. எப்போதும் இராஜாங்கத்தின் இரகசிய விஷயத்தைப் பற்றிப் பேசுவதில் ஒருவன் மிக்க ஜாக்கிரதையாக விருக்கவேண்டும். அவர் துரைத்தனத்தாரிடம் வேலே செய்கிருர் என்று நீ கருதியது உண்மையே. சில சமயங்களில் அவரே துரைத்தனமா யிருக்கிருர் என்று கருதுவதாயின் அதுவும் பொய்யல்ல" என்ருன்.

விசுவநாதன் மிக்க வியப்படைந்து "என்ன ஆனந்தஸிங் நீ கூறுவது? என்ருன். ஆனந்தஸிங் "நான் கூறும் சங்கதி யுனக்கு மிக்க வியப்பை யுண்டாக்குமென்று எனக்குத் தெரியும். என் தமையனுக்கு வருடத்திற்கு 450-பவுன் சம்பளம். அவருக்கு வெளியிடப்பட்ட அதிகாரம் செய்யும் வேலேயிலாவது, அதிக பணம் சம்பாதிக்கவேண்டுமென்ருவது, பட்டம் முதலிய கௌரவங்களே அடையவேண்டுமென்ருவது விருப்பமில்லே. ஆனல் தன்வரையில் துரைத்

தனத்தார்க்கு இன்றி யமையாத மனிதராய்விட்டார்" என்றான்.

விசுவநாதன் "அப்படியாயின் அவர் மிக்க முக்கியமான காரியங்களைச் செய்பவராக விருக்கவேண்டும். எவ்வாறு இன்றி யமையாதவராக ஆய்விட்டார்?" என்று வினவினான்.

ஆனந்த:—அவர் உத்தியோகம் ஒரு அபூர்வமான உத்தியோகம். அதை யவரே யுற்பத்தி செய்துகொண்டார். இதுவரையில் அப்படிப்பட்ட ஒரு உத்தியோகமேயில்லை. இனியுமிராது. அவரிடம் ஒரு அபூர்வசக்தி யிருக்கிறது. அதாவது அவர் மிக்க பரிசுத்தமும் கவனசக்தியுமுடைய மூளையுடையவர். விஷயங்களைச் சேர்த்துவைத்துக்கொண்டு அவசியமான போது அதை யதை நினைவிற்குக் கொண்டு வருவதில் இப்போதிருக்கும் எல்லா மனிதரையும் விடமிக்க சாமர்த்தியம் வாய்ந்தவர். எல்லா இலாக்காக்களின் முடிவான விஷயங்களும் அவருக்குத் தெரியும். எந்த தேசத்து முக்கியமான விஷயத்தைப்பற்றியும் அவரிடம் தகவல் கிடைக்கும். எல்லா மந்திரிகளும் ஒரு சமயமில்லாவிட்டால் ஒருசமயம் அவரிடம் வாராமல் முடியாது. யாவர்க்கும் அவர் அவசியமானவராய்விட்டார். எத்தனையோமுறை இராஜாங்கத்தில் உண்டாகும் குழப்பம் அவரால் நிவர்த்தியாகி யிருக்கிறது. எத்தனையோமுறை நேரிடக்கூடிய யுத்தம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அவருக்கு அந்த விஷயங்களைப்பற்றியே சதாசிந்தனை. அரிதாக எப்போதேனும் நான் என் விஷயத்தில் உதவிசெய்யும்படி அழைத்தால் வருகிறாரே அது தவிர மற்ற எந்த வெளிவிஷயங்களைப் பற்றியும் அவர் நினைப்பதேயில்லை. இன்றைக்கு என்

னமோ தாமே இங்கு வருகிறார். ஏதோ விசேஷமில்லாமல் வரமாட்டார். இந்தக் கொட்டூர் வாதப்பன் என்பவன் யார்? அவனைப்பற்றி இவருக்கு ஆகவேண்டியதென்ன? என்றான்.

அச்சமயம் திடீலென்று என்னமோ நினைத்துக்கொண்டவன்போல் "ஆ ஆ! இதோ கூறுகிறேன்" என்று மேஜைமேலிருந்த பத்திரிகைகளில் ஒன்றையெடுத்து "இதோ இருக்கிறதுபார். கொட்டூர் வாதப்பன் என்பவன் செவ்வாய்க்கிழமை காலையில் பூமியின்கீழ்ச் செல்லும் இரயில் பாதையில் மடிந்துகிடக்கக் காணப்பட்டான்" என்றான்.

அதைக்கேட்டதே ஆனந்தஸிங் தட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்து "ஆ அப்படியாயின் அதில் என்னமோ பிரமாதம் இருக்கவேண்டும். என் தமையன் கவனிக்கும் படிக்கும் அதற்காகத் தம் இதரவேலைகளை விட்டுவிட்டு என்னிடம் வரும்படியாகவும் செய்த ஒரு மரணம் சாதாரண மரணமா யிராது. ஆயினும் இவர் அதில் எப்படி சம்பந்தப் பட்டிருக்கிறாரோ என்பது தான் எனக்கு வியப்பாக விருக்கிறது. எனக்கு நினைப்பிருக்கிற வரையில் அந்த விஷயத்தில் ஒன்றும் விசேஷ மில்லை யென்றே தோன்றியது. அவ்வாலிபன் இரயில் வண்டியிலிருந்து விழுந்துவிட்டதால் மடிந்திருக்க வேண்டும். கள்வர் அகப்படவில்லை. அவனுக்கு யாரேனும் தீங்கிழைத் திருப்பார்களென்று கருதுவதற்குத் தகுதியான காரணம் ஒன்றுமில்லை. அல்லவா?" என்றான்.

விசுவ:—"மரண விசாரணை நடந்ததாகத் தெரிகிறது. அப்போது அனேகம் புதுவிஷயங்கள் வெளிவந்தன. அதை நெருங்கிப் பார்த்தால் அது ஒரு அபூர்வமான விஷயமே யென்று எனக்குப் புலப்படுகிறது" என்றான்.

ஆனந்தஸிங் "அதில் என் தமையனுக்கு மனம் சென்றிருப்பதை நோக்க அது மிக்க அபூர்வமான விஷயமென்றே புலப்படுகிறது. அதைப்பற்றிய விஷயங்களென்ன கூறு" என்ருன்.

அதன் மேல் விசுவநாதன் பத்திரிகையில் கண்ட விஷயங்களைக் கூறத் தொடங்கினுன். "அவன் பெயர் கொட்டூர் வரதப்பன். வயது சுமார் இருபத்தேழு- பிரம்மச்சாரி. துரைத்தன யுத்ததளவாடத் தொழிற் சாலையில் ஓர் இலிகிதனுக விருப்பவன்" என்றதே ஆனந்தஸிங் "ஆ! துரைத்தன உத்தியோகம். என் தமையனுக்கு இருக்கும் சம்பந்தத்தைக் கவனி" என்ருன்.

விசுவநாதன் பின்னும் கூறத் தொடங்கி "அவன் திங்கட்கிழமை இரவு தன் வாசஸ்தலத்தை விட்டுத் திடீலென்று புறப்பட்டான். அவன் வேதநாயகி என்ற கன்னிகையை மணம் புரியக் கருதி யிருந்தான். அவன் கடைசியாக அவளோடு பேசிக்கொண்டிருக்கக் காணப்பட்டான். சுமார் எழரை மணிக்குத் தட்டென்று அவளைப் பிரிந்து சென்ருன். அப்போது மூடு பனியாயிருந்தது. அவர்களுக்குள் சச்சரவு ஒன்றும் நேரவில்லை. ஆதோ அவன் அவளை விட்டுத் திடீலென்று சென்றதற்கு அவளுக்கு ஒரு காரணமும் புலப்படவில்லை. பிறகு மறு நாட்காலை ஆலப்பாக்கம் இரயில்வே ஸ்டேஷனுக் கருகில் பூமிக்குக் கீழ் செல்லும் இரயில் பாதையில் சவமாகக் கிடக்கக் காணப்பட்டான். இரயில் பாதையை பழுது பார்க்கும் வேலை செய்பவர்களில் ஒருவனுன மாசிலாமணி என்பவன் தான் முதல் முதல் அவன் சவத்தைக் கண்டவன்" என்ருன்.

ஆனந்தஸிங் அப்போது "என்னோ மிருக்கும்" என்ருன். விசுவநாதன் "செவ்வாயக்கிழமை காலை ஆறுமணியிருக்கும். சவம் பாதைக்கு இடது பக்கம் சற்று எட்ட

விழுந்து கிடந்தது. அந்த ஸ்டேஷனுக் கருகில் இரயில் பூமியின் கீழிருந்து வெளியில் வருமிடத்தில் சிரசு அதிக மாய் நசுங்குண்டிருந்தது. அந்தக்காயம் வண்டியிலிருந்து விழுந்ததால் உண்டானதாகவு மிருக்கலாம். அப்படி நேர்ந் திருந்தால்தான் தேகம் அந்த இடத்தில் வந்திருக்கலாகும். வேறு எந்த இடத்திலிருந்தேனும் அது அங்கு கொண்டு வரப்பட்டிருந்தால் ஸ்டேஷன் வழியாகத்தான் கொண்டு வரப்பட்டிருக்கவேண்டும். ஸ்டேஷனில் எப்போதும் ஒரு ஆள் அந்த வழியில் நின்றுகொண் டிருக்கிறான். ஏனெனில் பூமியின் கீழிருக்கும் இரயில் பாதை வழியாக யாரேனும் செல்வதாயின் தடுப்பதற்காக. இது நிச்சயமாய்த் தெரி யக்கூடிய சங்கதி" என்றான்.

ஆனந்த:—"சரி இது திடமாய்த் தெரிகிறது. அவன் கொல்லப் பட்டோ உயிரோடேயோ வண்டியிலிருந்து கீழே யெறியப் பட்டான் அல்லது விழுந்தான். பிறகு கூறு" என்றான்.

"சவம் விழுந்து கிடந்த வழியாகச் செல்லும் வண் டித் தொடர்கள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் செல் பவை. சில நாளிருந்தும் சில இதர சந்திப்புக்களிலிருந்தும் வருபவை. இம்மனிதன் அவன் மாணமடையுந் தறுவாயில் இந்த வண்டிகளிலொன்றில் அத் திக்கே சென்றுகொண் டிருக்கவேண்டும். ஆனால் எந்த இடத்திலிருந்து புறப்பட்டா னென்று தெரியவில்லை. அதை யறியக்கூட வில்லை" என் றதே, ஆனந்தஸிங் "ஏன் அவனிடமிருந்த பிரயாணச் சீட்டால் தெரியவில்லையா?" என்றான்.

விசுவநாதன் "அவனிடமிருந்து பிரயாணச்சீட்டு ஒன் றும் அகப்படவில்லை" என்றான். ஆனந்தஸிங் திடுக்கிட்டு வியப்படைந்து "என்ன? பிரயாணச் சீட்டில்லையா. இது மிக்க அபூர்வமான விஷயமே. என் அனுபவத்திற்குத்

தெரிந்த வரையில் நகரத்திலுள்ள எந்த ஸ்டேஷன் மேடைக்குள்ளும் கையில் பிரயாணச் சீட்டில்லாமல் செல்ல முடியாது. ஆகையால் அவ்வாலிபனிடமும் ஒன்று இருந்தேயிருக்கவேண்டும். அவன் எங்கிருந்து புறப்பட்டா னென்பதை மறைக்க அப்பிரயாணச்சீட்டு யாராலேனும் எடுத்துக்கொள்ளப்பட்டதா? அது நடக்கக்கூடியதே. அல்லது அவன் வண்டியில் அதை நழுவவிட்டானு? அதுவும் நடக்கக்கூடியதே. ஆனுல் இது அபூர்வமே. களவுபோன குறியொன்றுமில்லை யென்று நினைக்கிறேன்" என்றுன்.

விசுவ:--அப்படிக் காணப்படவில்லை. அவனிட மிருந்தவஸ்துக்கள் இதில் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவன் பணப்பையில் இரண்டு பத்து ரூபாயும் பதினேரணுவு மிருந்தது. ஒரு பாங்கிச் செக்குப்புத்தகம் ஒன்றிருந்தது. அதன் மூலமாகத்தான் அவன் இன்னுனென்று தெரிந்தது. அதோடு அந்த இரவுக்கே நாடகசாலை டிக்கட்டுகள் இரண்டிருந்தன. இவற்றேடு சிலதுரைத்தனக் கடிதங்களுமிருந்தன" என்றுன்.

அதைக்கேட்டதே ஆனந்தலிங் "ஆ! கடைசியில் சங்கதி விளங்கிவிட்டது. துரைத்தனக் கடிதங்கள்-யுத்த தளவாடத் தொழிற்சாலை - அதில் அவன் இலிகிதன்-என் தமையனுருக்கு இதைப்பற்றி யுண்டாயிருக்கும் கவலை-சரி சரி பூரணமாக விளங்கிவிட்டது. ஆ! பெரும்பாலும் அதோ என் தமையனே வருகிறுர்" என்றுன்.

இரண்டொரு நிமிடங்களில் மோகனலிங் உள்ளே வந்தான். அவன் தடித்த உருவமுடையவன். பார்வைக்குமந்தாகாரமான மனிதன்போல் காணப்படுவான். ஆனுல் அவனிடம் சகவாசம் செய்வோர் ஆரம்பத்தில் அப்படிக் கருதினுலும் இரண்டொரு நிமிடங்களில் அவன் புத்தி தேகத் தோற்றத்திற்கு நேர்மாருக விருக்கிறதென்று அறிந்து

கொள்வார்கள். அவன் நெற்றியே அவன் புத்தியின் ஆச்சரியமான தீட்சணியத்தை நன்ருக வெளிப்படுத்தக்கூடியதாக விருந்தது. அவன் அறிவின் பிரகாசம் அவன் நெற்றியில் நன்ருகப் பிரகாசித்துக்கொண் டிருந்தது.

அவன் காலடியைத் தொடர்ந்தாற்போல் துப்பறியும் இலாகா இன்ஸ்பெக்டராகிய இலக்ஷ்மணஸிங் வந்தான். அவர்கள் இருவருடைய முகக்குறிகளாலேயே ஏதோ விசேஷமிருக்கிறதென்று நன்ருய்த் தெரிந்தது. இலக்ஷ்மணஸிங் ஒன்றும் பேசாமல் ஆனந்தஸிங் காத்தைப்பற்றிக் குலுக்கினன். மோகனஸிங் கொஞ்சம் கஷ்டத்தோடு தன் மேற்சட்டையைக் கழற்றி மேலெறிந்துவிட்டு ஒரு சாய்ப்பு நாற்காலியில் சாய்ந்து கொண்டான்.

ஆனந்தஸிங் மரியாதையாய்த் தன் தமையன் எதிரில் சென்று நின்று அவன் முகத்தை "என்ன சங்கதி?" என்று கேட்பது போல் நோக்கினன்.

மோகன்:—ஆனந்தம்! இது மிக்க மனவெரிச்சலை யுண்டாக்கும் விவகாரம். என் சாதாரணமான நடவடிக்கைகளினின்றும் புரண்டு நடப்பதற்கு எனக்குச் சற்றும் பிரியமேயில்லை. ஆனல் மேலே யிருப்பவர்கள் மாட்டேன் என்ருல் ஒப்புக் கொள்கிறவர்களாயில்லை. இச்சமயம் சயாம் தேச விஷயங்களின் நிலைமையைக் கவனிக்கும் போது நான் என் காரியத்திலிருந்து வெளிவருவதே மிக்க அவகேடு. ஆனல் இது ஒருமெய்யான இக்கட்டே. பிரதமமந்திரி இவ்வாறு மனக்குழப்ப மடைந்ததை நான் இதுகாறும் ஒருபோதும் கண்டதேயில்லை. கடற்படையிலாகாவோ கீழ் மேலாக புரட்டப்பட்டதேன் கூண்டிலிருக்கும் ஈக்கள் எத்தகைய கலவரமடைந்திருக்குமோ அத்தகைய கலவரத்திலிருக்கிறது. இவ்

விஷயத்தைப்பற்றி நீ பத்திரிகையில் வாசித்தாயல்லவா?" என்ருன்.

ஆனந்த:—இப்போது தான் அதைப்பற்றி வாசித்தோம். அதிற் சம்பந்தப்பட்ட துரைத்தனக் கடிதங்கள் என்பவை யென்ன?

மோகன்:—"ஆ! அது தான் முக்கியமான விஷயம். நற்காலமாய் அது பகிரங்கத்திற்கு வரவில்லை. அதுமட்டும் வெளி வந்து விட்டிருந்தால் அய்யோ பத்திரிகைகளெல்லாம் உலை நீர் போல் கொதிக்குமே. இத்துரதிர்ஷ்டம் பிடித்தவாலிபன் தன் ஜேபியில் வைத்துக் கொண்டிருந்த கடிதங்கள் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட 'பெரிய வீரன்' என்ற ஜல மூழ்கிக் கப்பலைப் பற்றிய விவரங்களும் படங்களும் அடங்கியவை" என்ருன்.

அவன் கூறிய மாதிரியாலேயே அக்கப்பல் எத்தகையதானவிசேஷமுடைய தென்றும் அதைப்பற்றிய பத்திரங்கள் எவ்வளவு முக்கியமானவை யென்றும் கேட்போர்க்கு விளங்கியது. மோகன்ஸிங் அதைப்பற்றிக் கூறியபின் "நீ யதைப்பற்றிக் கேள்விப்பட்டே யிருக்கவேண்டும். யாவருமே அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிருர்களென்றே நான் நம்பிக் கொண்டிருக்கிறேன்" என்ருன்.

ஆனந்த:—பெயரை மட்டுமே கேள்விப்பட்டிருக்கிருேம்.

மோகன்:—அது இப்போது மிக்க பிரதானமானது. நான் கூறுவதை நம்பிக்கொள். இக்காலத்தில் கடற்சண்டையே மிக்க பிரதானமாய் ஆகிக் கொண்டிருக்கிறது. இச்சமயம் இருக்கும் துரைத்தன சம்பந்தமான இரகசியங்களெல்லா வற்றிலும் இச் சல மூழ்கிக் கப்பலைப் பற்றிய விஷயமே மிகச் சிறந்தது. இக்கப்பலை யொருவன் மிக்க சாமர்த்தியமாகக் கண்டு பிடித்துச் செய்

தான். அதன் சுந்தரம் அதாவது அதைச் செய்யும் இரகசியம் பெருந்தொகை கொடுத்துத் துரைத்தனத்தாரால் விலைக்கு வாங்கப்பட்டது. அத்தொகை வரவு செலவு கணக்கில் மிக்க மர்மமாகக் குறிக்கப்பட்டது. இது நடந்து இரண்டு வருடங்களே யாயின. இதை யிரகசியமாய் வைத்துக் கொண்டிருப்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதைக் கட்டுவதற்கு வேண்டிய பிளான்கள் (தகவல்களெல்லாம் குறிக்கப் பட்ட படங்கள்) முப்பது இருக்கின்றன. ஒவ்வொன்றும் அக்கப்பலின் ஒவ்வோர் பாகங்களே. ஆகையால் ஒவ்வொன்றும் அம்முழுக் கப்பல் செய்வதற்கு அவசியமானதே யாகும். ஒவ்வொரு பாகத்தின் அளவு அமைப்பு முதலியவை ஒவ்வொரு படத்திலிருக்கின்றன.

இப்படங்கள் முதலியவை தொழிற் சாலையில் ஒரு பத்திரமான அறையில் கள்ளர் முதலிய ஒருவராலும் திறக்க முடியாத இரும்புப் பெட்டியில் வைக்கப் பட்டிருக்கின்றன. எக்காரணத்தாலும் அவற்றை யத்தொழிற் சாலையின் காரியாலயத்தினின்றே வெளியில் எடுத்துச் செல்லலாகாது. யுத்தக்கப்பல்களைக் கட்டும் பிரதம உத்தியோகஸ்தன் கூட அவற்றைக் காணவேண்டுமாயின் வல்லூரிலிருக்கும் அத்தொழிற்சாலையின் காரியாலயத்திற்குச் செல்ல வேண்டியதே. அப்படியிருந்தும் அத்தகைய கடிதங்கள் மரித்த அந்தக் கீழ்த்தர இலிகிதன் ஜேபியில் இருந்திருக்கின்றன. உத்தியோக முறைமையில் பார்த்தால் இது பெரிய அவகேடான சமாசாரம்" என்றான்.

ஆனந்த:—ஆனால் அவை யுன்னிடம் சிக்கிவிட்டன வல்லவா?

மோகன்:—இல்லை யில்லை. அதுதானே தொந்திரவு. அவை

யகப்படவில்லை. அக்காரியாலயத்தினின்றும் பத்து கடிதங்கள் எடுக்கப்பட்டன. ஆனால் இறந்தவன் ஜேபியிலிருந்து ஏழுதான் அகப்பட்டன. அவையாவற்றிலும் பிரதானமானவை மூன்றே. அந்த மூன்றே யில்லை. அவை களவாடப்பட்டனவோ எப்படிப் போயினவோ, மாயமாய்ப் போய்விட்டன.

ஆனந்தா! நீ உனக்கு எத்தகைய வேலை யிருந்தாலும் யாவற்றையும் இச்சமயம் கட்டிச் சுருட்டிவிடு. எப்போதுமிருக்கும் உன் போலீஸ் குற்றங்களை யிப்போது கவனியாதே. இப்போது நீ கண்டுபிடிக்கவேண்டியது இராஜாங்க சம்பந்தமான பிரமாத விஷயம். அந்தக் கொட்டூர் வாதப்பன் அக்கடிதங்களை யேன் எடுத்துக்கொண்டு போனான்? காணாமற்போனவை யெங்கே யிருக்கின்றன? அவன் எப்படி இறந்தான்? அவன் அந்தவிடத்தில் எப்படிவந்தான்? இதற்கு என்ன செய்வது? இக்கேள்விகளுக்கெல்லாம் நீ விடை கண்டுபிடித்தால் உன் தாய் நாட்டிற்கு ஒரு பெரிய உதவியைச் செய்தவனாவாய்" என்றான்.

---

## 2-வது அத்தியாயம்.

ஆனந்தலிங் தன் தமையன் கூறிய யாவும் கேட்டுக் கடைசியில் "தாங்களே யேன் இதைக் கண்டு பிடிக்கலாகாது? எனக் கெட்டுகிறவரையில் தங்களுக்கு மட்டுமே" என்றான்.

மோகன்:—அது சரிதான். ஆனால் இது விவரங்களைக்கண்டு பிடிக்க வேண்டியது அவசியம். எனக்குமட்டும் தகவல்களையெல்லாம் கொடுத்துவிடு. நான் நாற்காலியில் சாய்ந்தபடி சரியான அபிப்பிராயம் கொடுப்பேன். ஆனால் அங்கு மிங்கும் சுறு சுறுப்பா யோடி யலையவும்

தக்க ஆட்களைக்கண்டு பன்முறை யவர்களைக் குருக்குக் கேள்விகள் கேட்கவும் பூதக்கண்ணுடியைப் போட்டுக் கொண்டு தரையில் முழங்காலிட்டுக் கால்மணி அரை மணிநேரம் குனிந்தபடி பார்த்துக்கொண்டிருக்கவும் இவைகளெல்லாம் என்னுலாகிற வேலைகளல்ல. நான் அதற்கு ஆட்டாளியல்ல. இந்த விஷயத்தில் உண்மை யைக் கண்டுபிடிக்கத் தகுதியுடையவன் நீ யொரு வனே. உனக்கு உன்பெயரோடு ஒரு பட்டப் பெயர் சேரவேண்டுமென்று விருப்பம்........" என்பதற்குள், ஆனந்தஸிங் "வேண்டாம்" என்று தலை யசைத்து விட்டு"நான் இத்தகைய வேலையிலிருக்கும் பிரியத்தாலேயே இதைச் செய்பவன். இதில் சில சிக்கான மர்மங்கள் இருக் கிறபடியால் இதில் வேலைசெய்ய எனக்கு விருப்பமே. இன் னும் ஏதேனும் சமாசாரங்கள் இதில் சம்பந்தப்பட்டவை யிருந்தால் அவற்றையும் கூறினுல் நலம்" என்றுன்.

மோகன:—இதில் சம்பந்தப்பட்ட முக்கியமான விஷ யங்களையெல்லாம் இக்கடிதத்தில் குறித்திருக்கிறேன். அவற்றேடு சிலர் விலாசங்களும் குறித்திருக்கிறேன். அவைகளும் உனக்குப் பிரயோசனமாக விருக்க லாம். அக்கடிதங்களின் முக்கிய பாதுகாவலன் ஸர் தார் ஜீவரத்னம் என்பவர். அவருடைய பட்டப் பெயர்கள் சரியாய் இரண்டு மூன்று வரிகள் இருக் கும். அவர் காலமெல்லாம் இந்த வேலையிலேயே கழித்தவர். இக்கப்பல்கள் கட்டுவதில் கை தேர்ந்த நிபுணர். மிக்க உயர்ந்த அந்தஸ்திலிருக்கும் ஆசாமி களுக்கெல்லாம் பிரியமானவர். முக்கியமாய் தேசப் பற்றுடையவர். அக்கடிதங்கள் வைக்கப்பட்டிருக்கும் பெட்டிக்குள்ள இரண்டு சாவிகளில் ஒன்று அவரிட மிருக்கிறது. திங்கட்கிழமை பகல் முழுவதும் அக்கடி

தங்கள் காரியாலயத்தில் இருந்தன வென்று நிச்சய மாய்க் கூறுவேன். சுமார் மூன்று மணிக்கு ஸர்தார் ஜீவரத்னம் தன்னிட முள்ள சாவியை யெடுத்துக் கொண்டு இரத்தன புரிக்குச் சென்றார். தொழிற் சாலை யிருப்பது வல்லூர் என்று உனக்குத் தெரிந்தே யிருக்கிறது. ஸர்தார் இரத்தின புரியிலிருக்கும் கடற் படை சேனாதிபதியிடம் சென்று இரவு முழுமையும் அங்கேயே யிருந்தார்" என்றான்.

ஆனந்த:—"அச்சங்கதியைச் சோதனை செய்தீரா?" என்றான்.

மோகன்:—ஸர்தாரின் சகோதரர் ஸர்தார் வல்லூரை விட்டுச் சென்றதைப்பற்றி கூறினர். சேனாதிபதி ஸர்தார் தம்மிடம் வந்ததைப் பற்றி கூறினர். அதில் ஒன்றும் சந்தேகிக்கத்தக்க விஷயமில்லை. ஆகையால் அவருக்கு அச்சம்பவத்தில் யாதொரு சம்பந்தமு மில்லையென்று நன்கு விளங்குகிறது.

ஆனந்த:—மற்றொரு சாவியாரிடம் இருக்கிறது?

மோகன்,—கப்பல்களின் படங்களை யெழுதும் மேல் உத்தியோகஸ்தரிட மிருக்கிறது. அவருக்கு நாற்பது வயதிருக்கும். ஐந்தாறு குழந்தைகளை யுடையவர். அவர் எப்போதும் மர்மமாகவும் அடக்கமாகவுமே யிருப்பவர். ஆனால் நெறியுடையவர். அவர் கூட உத்தியோகம் செய்பவர்களுக்கு அவரிடம் நட்புகிடையாது. ஆனால் உழைப்பாளி. அவரும் அவர்மனைவியும் கூறுகிறபடி அவர் திங்கட்கிழமை இரவு முழுமையும் வீட்டைவிட்டுக் கிளம்பவே யில்லை. சாவியும் அவரிடமே யிருக்கிறது. மாட்டி வைத்துக் கொண்டிருக்கிறார்.

ஆனந்த:—இறந்தவனைப் பற்றிய விவகாரங்களைக் கூறும்.

மோகன்:—கொட்டூர் வாதப்பன் பத்து வருடங்களாக வேலையிலிருக்கிறான். வேலையில் அவனுக்கு நல்ல பெயரே. அவன் முன் கோபமும் ஆத்திரமுமுடையவ னென்றும் ஆனால் நேர்மையும் சத்தியமு முடையவ னென்றும் பெயரெடுத்தவன். அவனுக்கு விரோத மாகக் கூறத்தக்க விஷயம் ஒன்றுமில்லை. உத்தியோக முறைமையில் அவன் படம் எழுதுகிறவருக்கு இரண் டாவது அந்தஸ்திலிருப்பவன். அவன் தொழில்முறை மையில் அடிக்கடி அப்படங்களைக் கையாட வேண்டிய வன். வேறு எவரும் அவைகளைத் தொடவேண்டிய அவசியமில்லை.

ஆனந்த:—திங்கள் மாலையில் யார் அப்படங்களைப் பெட்டி யில் வைத்துப் பூட்டியது?

மோகன்:—படம் எழுதுகிறவரும், இலிகிதர்களின் தலை வருமான சிங்காரம்பிள்ளையே.

ஆனந்த:—சரி. அவற்றை யெடுத்துச் சென்றவர்கள் யாரென்பது நிச்சயமாகவும் தெளிவாகவும் தெரிகி றது. அவைகள் வாதப்பன் வசத்தி லிருந்தகப்பட் டன. இது முடிவாய்த் தெரிகிறதல்லவா?

மோகன்:—ஆம் தெரிகிறதுதான். ஆயினும் அதைப்பற் றிய சங்கதிகள் வெளியாகவில்லையே. முதலாவது அவன் ஏன் அவற்றை யெடுத்துக் கொண்டு போக வேண்டும்?

ஆனந்த:—அவை மிக்க விலைமதிப்புள்ளவை யென்று கருது கிறேன்.

மோகன்:—அவன் அவற்றிற்காக மிக்க சுலபமாய் அனேக மாயிரம் பவுன்கள் பெற்றுக் கொண்டிருக்கலாம்.

ஆனந்த:—அவன் விற்பதற்கல்லாமல் வேறு எந்தக் காரண

திற் கேனும் அவற்றை நகாத்திற்கு எடுத்துக் கொண்டு போயிருப்பான் என்று கருதவழியிருக் கிறதா?

மோகன்ஸிங் "இல்லை யொருகாரணமுமில்லை; என் ருன். ஆனந்தஸிங் "அப்படியாயின் நாம் அதையே ஆதார மாக வைத்துக்கொள்வோம். வாதப்பன் அக்கடிதங்களை யெடுத்துச் சென்ருன். வேறு கள்ளச்சாவி வைத்துக் கொண்டிருந்தாலன்றி அப்படிச்செய்ய முடியாது" என் ருன்.

மோகன்:—"ஒரு கள்ளச்சாவிமட்டும் போதாது. அனே கம் வேண்டும். வெளிக்கதவு முதல் பல கதவுகளைத் திறந்துகொண்டு செல்லவேண்டும்" என்ருன்.

ஆனந்த:—சரி அநேகம் கள்ளச்சாவிகளே வைத்துக்கொண் டிருந்தான். அவன் அவற்றை விற்பதற்காக இரத்ன புரிக்கு எடுத்துச் சென்ருன். ஆனல் அப்படங்களை மறுபடி மறுநாள்காலை அவை தேடப்படுமுன்பு பெட் டியில் கொண்டுவந்து வைத்துவிடக் கருதியிருப்பான். இதிற் சந்தேகமில்லை. இந்த வேலைக்காக இரத்னபுரியி லிருக்கையில் அவனுக்கு இந்த ஆபத்து நேர்ந்தது.

மோகன்:—எப்படி நேர்ந்தது என்பது தான் கண்டுபிடிக் கப்பட வேண்டும்.

ஆனந்த:—அவன் இரத்தினபுரியிலிருந்து வல்லூருக்கு வந்துகொண் டிருந்தானென்றும் வழியில் கொல்லப் பட்டு வண்டியிலிருந்து வெளியிலெறியப்பட்டானென் றும் உத்தேசிப்போம்.

மோகன்:—அவன் வல்லூருக்குப்போக வேண்டுமாயின் பெரிய பாலத்தருகிலுள்ள கிளைப்பாதை வழியே திரும்பிவிட் டிருக்கவேண்டும். ஆனல் அவன் தேகம்

இருந்த ஆலப்பாக்கம் ஸ்டேஷன் பெரிய பாலச்சந்திப்பைக் கடந்து வெகுதூரத்திலிருக்கிறது.

ஆனந்த்:—அவன் பாலத்தைக்கடந்து அந்த வழி செல்வ, தற்குப் பல காரணங்களிருக்கலாகும். அவன் வண்டியில் யாரையேனும் சந்தித்திருப்பான். அந்த ஆளோடு நெடுநேரம் பேசிக்கொண் டிருக்கவேண்டிய முக்கியமான விஷயம் ஏதேனு மிருந்திருக்கும். அச்சம்பாஷணையிலேயே இருவருக்கும் சச்சரவுநேர்ந்து கைகலந்து விட்டிருக்கும். மற்றவன் இவனைக் கொன்றுவிட் டிருப்பான். அல்லது ஒரு சமயம் அவன் வண்டியைவிட் டிறங்க முயன்று கிழே விழ்ந்து விட்டு அதனால் இறந்திருப்பான். மற்றவன் பேசாமல் கதவை மூடிவிட் டிருப்பான். அச்சமயம் மூடுபனி அதிகதடிப்பாகவிருந்தது. ஆகையால் ஒன்றுமே தெரியாது" என்றான்.

மோகன்:—இப்போது நமக்குத் தெரிந்திருக்கிற வரையில் இதற்குமேல் ஒன்றும் கண்டறிய முடியாது. ஆனந்தா! ஆயினும், இன்னும் எவ்வளவு விஷயங்கள் வெளிவராம லிருக்கின்றன பார். விவகாரத்திற்காக கொட்டூர் வாதப்பன் இக்கடிதங்களை இரத்தினபுரிக்குக் கொண்டுபோகவே தீர்மானித்தான் என்று வைத்துக்கொள்வோம். அப்படியிருந்தால் அவன் அவற்றை வெளி நாட்டுக் காரியஸ்தரிடம் கொண்டுபோக வேண்டியதற்காக அன்று இரவில் தனக்கு எவ்வித வேலையும் வைத்துக்கொண் டிருக்கமாட்டான். மூடனும் அப்படிச் செய்யான். ஆனால் இவன் அதே யிரவு நாடகத்திற்குச் செல்ல இரண்டு சீட்டுகள் வாங்கி வைத்துக்கொண் டிருக்கிறான். அதோடு தன் காதலியை நாடகசாலைக்குப் பாதி தூரம் அழைத்துச் சென்று

தட்டென்று அவளை விட்டுவிட்டுப் போய்விட்டிருக்கிறான்" என்றான்.

இதுகாறும் எல்லாச் சம்பாஷணைகளையும் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்த இலக்ஷ்மணஸிங் "ஏன்? அப்படிச் செய்தது தந்திரமாய் நடக்கும் விஷயத்தை மறைப்பதற்காக விருக்கலாகாதோ?" என்றான்.

மோகன்:—"ஆயினும் மிக்க அதிசயமான தந்திரம். இது 1-வது ஆக்ஷேபனை. இனி 2-வது ஆக்ஷேபனையைக் கூறுகிறேன். அவன் இரத்னபுரி சேர்ந்து அன்னிய நாட்டுக் காரியஸ்தனைக் காண்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்போது அவன் அக்கடிதங்களை மறுநாட் காலைக்குள் கொண்டுவந்து வைத்துவிட வேண்டும். இன்றேல் சங்கதி வெளியாய் விடும். அவன் பத்து கடிதங்கள் மட்டுமே எடுத்துக்கொண்டு போனான். ஆனால் அவற்றில் ஏழு கடிதங்களே அவன் சட்டைச் சேபியில் இருக்கின்றன. மற்ற மூன்றும் எவ்வாறாயின? உண்மையில் அவன் மனப்பூர்வமாக அவற்றை விற்றுவிட்டிருக்கமாட்டான். அதோடு அவன் விற்றதனால் பெற்றபணம் எங்கே? அவனிடம் பெருந்தொகையான பணம் இருக்கும் என்றல்லவோ எதிர்பார்க்க வேண்டும்" என்றான்.

இலக்ஷ்மணஸிங்:—"இது எனக்கு நன்றாய் விளங்குகிறது. நடந்தது இன்னதென்பதில் எனக்கு எள்ளளவு சந்தேகங்கூட இல்லை. அவன் அன்னியநாட்டுக் காரியஸ்தனைக் கண்டான். விலை விஷயத்தில் இருவர்க்கும் ஒற்றுமை ஏற்படவில்லை. அவன் வீட்டிற்குத் திரும்பினான். அக்காரியஸ்தனும் கூடவே தொடர்ந்து வந்தான். அவன் வழியில் வாதப்பனைக் கொன்றுவிட்டு

அவனுக்குவேண்டிய முக்கியமான கடிதங்களை மட்டும் எடுத்துக்கொண்டு சவத்தை வண்டியிலிருந்து கீழே தள்ளி விட்டான். இது எல்லா விஷயங்களுக்கும் பொருத்தமாக இருக்கிறது அல்லவா?” என்றான்.

மோகன்:—அவனிடம் பிரயாணச் சீட்டு ஏன் இல்லை?

இலக்ஷ்:—பிரயாணச் சீட்டிருந்தால் அக்காரியஸ்தன் வீடு இன்ன ஸ்டேஷனுக்குச் சமீபத்திலிருக்கிறதென்று காட்டி விடும். அதனால் அவன் இறந்தவன் ஜேபியி லிருந்து அதை யெடுத்துக் கொண்டான்.

ஆனந்த:—“பேஷ்! இலக்ஷ்மணஸிங் பேஷ்! நீ கூறும் நியாயம் பொருத்தமாகவே யிருக்கிறது. ஆனால் இதுவே யுண்மையாயின் இந்த விவகாரம் முடிந்துவிட்ட மாதிரியே. ஒரு பக்கம் அக்கடிதங்களைக் களவாடிய துரோகி மடிந்துபோனான். மற்றொரு பக்கம் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட அந்த அதிசயமான நீர் மூழ்கிக் கப்பலைப்பற்றிய படங்கள் இதுகாறும் அன்னியநாடு போய்ச் சேர்ந்திருக்கும். இனிமேல் இதில் நாம் செய்யவேண்டியது என்ன விருக்கிறது?” என்றான்.

மோகன்ஸிங் ஆத்திரத்தோடு “ஆனந்தா! வேலைவேலை. நீ செய்யவேண்டியது வேலை. உன் சாமார்த்தியம் முழுமையும் இதிற் காட்டு. என் புத்தி யுணர்ச்சிகள் யாவும் இப்போது கூறப்பட்ட உத்தேசங்களுக்கு முழுமையும் மாறாக விருக்கிறது. நீ செய்யத்தக்க முயற்சிகளை யெல்லாம் ஒன்று விடாமற்செய். சவம் இருந்த இடத்தைப்போய்ச் சோதனை செய். விசாரிக்க வேண்டியவர்களை யெல்லாம் விசாரி. உன் ஆயுளில் இது வரையில் உன் தேசத்திற்கு இத்தகைய பெரிய உபகாரம் செய்யத்தக்க சந்தர்ப்பம் உனக்கு வாய்க்க வில்லை” என்றான்.

ஆனந்தஸிங் "சரி. அப்படியே யாகட்டும். வா விசுவ நாதம். இலக்ஷ்மணஸிங் நீயும் தயவுசெய்து இரண்டு மணி நேரம் என் கூட இருப்பாயல்லவா. நாம் முன்னே ஆலப் பாக்கம் ஸ்டேஷனுக்குச் செல்வோம்" என்று கூறிவிட்டுத் தன் தமையனை நோக்கி, "நான் மாலைக்குள் உமக்குச் சங்கதி தெரிவிக்கிறேன். ஆனால் முன்னாடியே கூறுகிறேன். நான் அறிவிப்பது அதிகமாகவிராதென்றே கருதுகிறேன்" என்றான். மோகன்ஸிங், "அது எதிர்காலத்தைப் பொருத்தியது. நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

ஒரு மணி நேரத்திற்குள் மற்ற மூவரும் சவம் விழுந்து கிடந்த இடம்போய்ச் சேர்ந்தார்கள். அது ஆலப்பாக்கம் ஸ்டேஷனருகில். அந்த இடத்தில் பாதை பூமியின் கீழிருந்து வெளிவருகிறது. ஸ்டேஷனில் சிவந்த முகமுடைய ஒரு வயோதிகனிருந்தான். இரயில்வே இலாகாவைச் சேர்ந்தவன். ஆனந்தஸிங் அவனை விசாரித்தபோது அவன் சவம் விழுந்திருந்த இடத்தைக்காட்டி, "இங்குதான் சவம் இருந்தது. அதுமேலேயிருந்து விழுந்திராது. மேலும் வளைவான கட்டிடமேயிருக்கிறது. ஆகையால் சவம் இவ்வழியாகவந்த வண்டித் தொடரில்தான் வந்திருக்கவேண்டும். வேறெவ்விதத் தகவலும் அகப்படவில்லை. நாங்கள் கண்டறியக்கூடிய வரையில் சுமார் இரவு பன்னிரண்டுமணிக்கு இவ்வழியே வந்த வண்டித்தொடரில் தான் அது வந்திருக்கவேண்டும்" என்றான்.

ஆனந்தஸிங் வண்டிகளில் ஏதேனும் சச்சரவு நடந்த குறி யிருக்கிறதாவென்று சோதனை செய்தீர்களோ என்று கேட்டதற்கு அப்படி யொன்றும் அகப்படவில்லை யென்றும் பிரயாணச்சீட்டும் அகப்படவில்லை யென்றும் அம்மனிதன் கூறினான். ஆனந்தஸிங் வண்டிகளில் எந்த வண்டியின் கதவாவது திறந்துகிடக்கக் காணப்பட்டதா என்று கேட்ட

தற்கு அவன் அப்படி ஒரு கதவும் திறந்திருக்கப்படவில்லை என்றான்.

இலக்ஷ்மணஸிங், "இன்று காலை யொரு புது சங்கதி கிடைத்தது. அதாவது இரவு சுமார் பதினொன்றே முக்கால் மணிக்கு நகரிலிருந்து வரும் ஒரு சாதாரண வண்டித்தொடர் இவ்வழியாகச் செல்லும்போது தான் உட்கார்ந்திருந்த வண்டிக்குச் சமீபவண்டியிலிருந்து மனிததேகம் போன்ற ஏதோ ஒரு பாரமான வஸ்து பொத்தென்று கீழே விழுந்தது போலச் சத்தம் கேட்டதாகவும் மிக்க மூடுபனியாக விருந்ததால் ஒரு பொருளும் காணப்படவில்லை யென்றும் அவ் வண்டியில் பிரயாணம் செய்த ஒரு மனிதன் கூறினான். ஆனால் அச்சமயம் அவன் அதை அதிகாரிகளிடமாவது வேறு யாரிடமாவது தெரிவிக்கவில்லை" என்று கூறியதும் "ஆ! ஆனந்தஸிங்! என்ன சங்கதி? ஏன் இப்படிப் பார்க்கிறாய்?" என்றான்.

ஏனெனில் அச்சமயம் ஆனந்தஸிங் அங்கு கீழேயிருந்த தண்டவாளக் கம்பிகளை யுற்று நோக்கிக்கொண் டிருந்தான். அந்த ஸ்டேஷன், பாதைகள் சந்திக்குமிடம் ஆதலால் சில கிளைப்பாதைகள் அங்கிருந்தன. அதோடு பாதையும் வளைந்துசென்றது. ஆனந்தஸிங்கின் முகம் சிவந்தது. அவன் கண்களில் ஒருவிதப் பிரகாசம் உண்டாயிற்று. உதடுகள் துடித்தன. புருவங்கள் நெருங்கின. அவன் சுபாவங்களை நன்கறிந்த விசுவநாதன் ஓகோ ஏதோ அபூர்வமான விஷயம் இவன் மனதிற்குப் புலப்பட்டிருக்கிறது என்று உணர்ந்து அவனை யுற்று நோக்கியபடி யிருந்தான்.

ஆனந்தஸிங் கடைசியில் "சந்திப்பு கிளைகள் கிளைகள்" என்றான்.

இலக்ஷ்:—"ஆம் கிளைகள் தான். என்ன உன் அர்த்தம்? கிளைகளிருப்பதால் என்ன விசேஷம்?" என்றான்.

ஆனந்த:—ஆனால் மிக்க அதிகமான கிளைகளில்லை போலும்.

இலக்ஷ்:—இல்லை. மிகச்சிலவே. இது பெரிய சந்திப்பு இடமல்லவே.

ஆனந்த:—"ஓகோ! ஒரு வளைவுகூட, கிளைகள்-வளைவு-ஆகா-பேஷ். அப்படி மட்டும் இருக்குமாயின்——" என்ற போது,

இலக்ஷ்மணஸிங் மிக்க வியப்போடு "என்ன ஆனந்தஸிங்? ஏதேனும் உளவு அகப்பட்டதோ? என்றான். ஆனந்தஸிங் "ஒரு உத்தேசம் - யோசனையே. ஆனால் இது ஒரு அதிசயமான விஷயமே. மிக்க அபூர்வ சமாசாரம். ஆம் ஆயின் ஏன் இருக்கலாகாது? பாதையில் ஏதேனும் இரத்தம் சிந்தப்பட்டிருந்ததோ? என்றான்.

இலக்ஷ்மணஸிங் அதொன்றுமே யில்லை.

ஆனந்த:—மிக்க பலமான காயம் பட்டதாய் மட்டும் தெரிகிறது.

இலக்ஷ்:—எலும்பு நொருங்கி விட்டது. வெளிப்படையான காயமொன்று மில்லை.

ஆனந்த:—"அத்தகைய காயம் பட்டதற்கு இரத்தம் கொஞ்சமேனும் சிந்தியிருக்கு மென்றே யாரும் எதிர்பார்ப்பார்கள். இருக்கட்டும்" என்று இரயில் உத்தியோகஸ்தனை நோக்கி "அந்தச் சவம் விழுந்த சத்தத்தைக் கேட்டதாய்க் கூறிய பிரயாணி ஏறிக் கொண்டிருந்த வண்டியை யான் காணக் கூடுமா?" என்றான்.

அம்மனிதன்:—"அது முடியாது அந்த வண்டித் தொடர் பிரிக்கப்பட்டு அதிலிருந்த வண்டிகள் வெவ்வேறு வண்டித் தொடர்களாக இது காறும் கோர்க்கப்பட்டிருக்கும்." என்றான்.

இலக்ஷ்:—"அந்த வண்டியிலாவது வேறெந்த வண்டியிலாவது ஒரு உளவாவது எவ்வகைக் குறியாவது

கிடைக்கா தென்று நான் நிச்சயமாகக் கூறுவேன். நானே நேரில் இருந்து எல்லா வண்டிகளேயும் சோதனை செய்து பார்த்தேன்” என்றான்.

ஆனந்தஸிங் “இருக்கலாம் இருக்கலாம். ஆனால் யோசித்துப் பார்க்கையில் நான் அவ்வளவாக அவ்வண்டியைப் பார்க்க வேண்டு மென்ற அவசிய மில்லை. சரி. இப்போது இங்கு நாம் பார்க்க வேண்டிய யாவும் முடிந்தன. இனி யொன்று மில்லை யென்றே நினைக்கிறேன் இலக்ஷ்மணஸிங்! இனி நான் உனக்கு தொந்தரை யளிக்க வேண்டிய அவசியமில்லை. நீபோகலாம்; விசுவநாதம்! இனி நாம் இப்போது செல்லவேண்டியது வல்லூருக்கு” என்றான்.

ஆனந்தஸிங்கும் விஸ்வநாதனும் உடனே ஸ்டேஷன் மேடையின் மேல் உட்கார்ந்து சற்றுநேரத்திற்குள் வல்லூர் பக்கம் செல்லும் வண்டித் தொடரின் வருகையை யெதிர் பார்த்திருந்தார்கள். வண்டி வருவதற்குள் ஆனந்தஸிங் ஒரு கடிதத்தில் என்னமோ எழுதத் தொடங்கினான். அது முடியு முன் வண்டி வந்து விட இருவரும் அதில் ஏறிக் கொண்டு பாலத்தருகிலுள்ள ஸ்டேஷன் செல்வதற்குள் ஆனந்தஸிங் தான் எழுதுவதை எழுதி முடித்து ஸ்டேஷனில் வண்டி நின்றதும் அதை விசுவநாதனிடமளித்து “இத் தந்தியை வாசித்துப் பார்த்து தந்தி இலிகிதரிடம் கொடுத்து உடனே யனுப்பிவிடச் சொல்லு” என்றான்.

அத்தந்தி அவனுடைய தமையனுக்கு எழுதப்பட்டது. அதில் “இருளில் கொஞ்சம் ஒளிதோன்றுகிறது. ஆனால் ஒரு சமயம் அது மின்மினி போல் மறைந்து விட்டாலும் மறைந்து விடலாம். ஆயினும் தாங்கள் ஒன்று செய்யவேண்டுகிறேன். வெளி நாட்டு இராஜாங்கக் காரியஸ்தர்கள், வேவுகாரர்கள் யாரார் இப்போது இரத்னபுரியி

விருப்பதாகத் தங்களுக்குத் தெரியுமோ அவர்கள் அனைவரின் முழுவிலாசத்தையும் எழுதி உடனே யொரு ஆள் வசம் என் வீட்டிற் கனுப்பி நான் வரு மட்டும் அவனைக் காத்திருக்கச் சொல்லவும்" என்று எழுதி யிருந்தது.

விசுவநாதன் தந்தியை இலகிதரிடமளித்து விட்டு வந்து மறுபடி வண்டியிலேறியதும் வண்டி புறப்பட்டது. ஆனந்தஸிங் அவனை நோக்கி "நண்பனே! உண்மையாகவே இத்தகைய அபூர்வமான சங்கதியை யளித்ததற்காக என் தமையனுருக்கு நாம் மிக்க வந்தன மளிக்க வேண்டும். இது ஒரு பெரிய அபூர்வ விஷயமே யென்பதில் சற்றும் ஐயமின்றும்" என்றுன்.

அவன் முகத்தில் இன்னும் முன்புண்டான பிரகாசமும் தீக்ஷண்யமான பார்வையு மிருந்தது. அதனுல் அவன் மனதில் ஏதோ ஒரு புது அபூர்வமான தீர்க்காலோசனை தோன்றியிருக்கிற தென்று புலப்பட்டது. காலைமுதல் அவன் ஒரு புதுமனிதனுகவே மாறிவிட்டான். ஒரு வேட்டை நாய் சாதாரணமாகத் தன் அறையில் உலவிக் கொண்டிருக்கும் போது, தன் செவிகளைத் தொங்க விட்டுக் கொண்டு நிதானமாகவும் மந்தமான பார்வையோடும் மெது வாய் அங்கு மிங்கும் திரிந்து கொண்டிருக்கிறது. ஆனுல் அதே நாய் ஒரு வேட்டை மிருகம் சென்ற பாதையை போய்ப் பிடித்துக் கொண்டு அம்மிருகம் பதுங்கி யிருக்கும் இடத்தை நோக்கிச் செல்லும் போது செவிகளை நட்டபடி நிமிர்த்திக் கொண்டு நாசிதுடிக்கத் தரையை முகந்தபடி தீக்ஷண்யமான பார்வையோடு மிக்க சுறு சுறுப்பாய் ஓடுகிறது. அதைப்போலவே இச்சமயம் ஆனந்தஸிங் புலப்பட்டான்.

அவன் ஆழ்ந்த சிந்தனையிலிருந்து திடீலென்று "ஆம் நல்ல ஆதாரம் கிடைத்திருக்கிறது. இது நெடுந்தூரம்

கொண்டு போகக்கூடும். இதனால் இத்தகைய சம்பவங்கள் நேரிடக்கூடும் என்று நான் முன்னமே ஊகிக்காமற் போனது மந்தத் தன்மையே" என்றான்.

விசுவ:—"எனக்கு என்னமோ இன்னும் யாவும் பெரும் இருளாகவே தோன்றுகிறது" என்றான்.

ஆனந்த:—"எனக்கும் முடிவு இருட்டாகத் தான் இன்னும் தோன்றுகிறது. ஆயினும் இது ஒரு பெரிய அபூர்வ சம்பவமே. இப்போது நீ எள்ளளவும் எதிர்பாராத சங்கதி கூறப் போகிறேன். அதாவது உண்மையில் கொட்டூர் வரதப்பன் வேறொரு இடத்தில் கொல்லப்பட்டான். இரயில் வண்டியிலுமல்ல. அவன் சவம் விழுந்து கிடந்த இடத்திலுமல்ல. அதோடு அவன் சவம் வண்டியின் கூரைமேல் இருந்து கீழே விழுந்த சத்தமே அப்பிரயாணியின் செவியில் கேட்டது" என்றான்.

விசுவநாதன் மிக்க வியப்படைந்து "என்ன? வண்டியின் கூரைமேலா?" என்றான்.

ஆனந்த:—"இது மிக்க வியப்பாகத் தோன்றுகிறதல்லவா? ஆனால் நடந்த உண்மைகளைக் கவனி. அச்சவம் எங்கு விழுந்திருந்தது? வண்டி எங்கு அதிகமாய் அசைந்தாடுமோ அங்கு தான் விழுந்து கிடக்கிறது. எங்கு சந்திப்பிருக்கிறதோ அங்கு எப்படியும் வண்டியசையும். அதிலும் அதேயிடத்தில் வழியும் வளைந்து செல்வதாயின் பின்னும் அதிகமாயசையும். அந்த விடத்தில் சவம் கிடப்பது தற்செயலென்றுநினைக்கிறாய்? கூரைமேலிருக்கும் வஸ்து கீழேவிழ அது தான் சரியான இடம். உள்ளேயிருக்கும் பொருள்களுக்கு அதனால் கெடுதி நேராது. இப்போது இரத்தத்தைப்பற்றிய விஷயத்தை யோசித்துப்பார். வேறிடத்தில் இரத்தம்

ஒழுகிவிட்டிருந்தால் தான் சவம் இருந்தவிடத்தில் இரத்தம் இராமலிருக்கும். இவையொன்றுக்கொன்று சரியாயிருக்கிறது. யாவற்றையும் சேர்த்துப்பார்த்தால் பொருத்தமாகவே தோன்றுகிறது" என்றான்.

விசுவ:—"என்ன? பிரயாணச்சீட்டு விஷயம் கூடவா?" என்று ஆத்திரத்தோடு கேட்டான்.

ஆனந்த:—சரிதான். பிரயாணச்சீட்டில்லாமலிருப்பதற்குத் தக்க காரணம் நமக்குப்புலப்படவில்லை. இதில் சரியான காரணமிருக்கிறது. எல்லாம் ஒன்றோடொன்று சரியாய்ப் பொருந்துகின்றன.

விஸ்வ:—"அப்படியே எண்ணிக்கொண்டாலும் அவன் மரணத்தைப்பற்றிய மர்மம் இன்னும் நமக்குப்புலப்படாமலேயிருக்கிறது. உண்மையில் இது போகப்போக சுலபமாகவில்லை. அபூர்வமானதாகவே ஆகிறது" என்றான். வண்டி.

வல்லூர் சேருமட்டும் ஆனந்தஸிங் பேசாமல் ஆழ்ந்த சிந்தனையி லிருந்தான்.

## 8-வது அத்தியாயம்.

186507

வல்லூர் ஸ்டேஷனில் வண்டி நின்றதும் இருவரும் வண்டியினின்றிறங்கினார்கள். ஆனந்தஸிங் உடனே ஒரு குதிரை வண்டியைக் கூப்பிட்டான். இருவரும் அதில் ஏறினதும் ஆனந்தஸிங் விசுவநாதனை நோக்கி, நாம் பலரைப் போய்க் காணவேண்டியிருக்கிறது. ஆனால் முன்னே ஸர்தார் ஜீவரத்னம் பிள்ளையைக் காணவேண்டியிருக்கிறது" என்றான்.

அவ்வாறே நோாய் அந்த உத்தியோகஸ்தர் வீட்டிற்குச் சென்றார்கள். இவர்கள் அவருடைய வீட்டை நெருங்

186507

கும் போது மூடுபனியும் குறைந்தது. ஒரு வேலைக்காரன் வந்து கதவைத்திறந்தான். ஆனந்தஸிங், "எஜமான் வீட்டிலிருக்கிறாரா ?" என்றான். வேலைக்காரன் துயரத்தோடு, "அய்யா ! ஸர்தார் ஜீவரத்னம் அவர்களையா கேட்கிறீர்கள். அந்தோ! அவர் காலையிற்றான் இறந்து போனார்" என்றான்.

இதைக் கேட்டதே ஆனந்தஸிங் பேரிடி விழுந்தவன் போல் திடுக்கிட்டு, "ஐயோ கடவுளே! அவர் இறந்து போனாரா? எப்படி இறந்துபோனார்?" என்றான்.

வேலைக்காரன் "தயவுசெய்து உள்ளே வாருங்கள். அவர் சகோதரர் இருக்கிறார். அவரைக் கேட்டு எதுவும் தெரிந்து கொள்வீர்கள்" என்றான்.

ஆனந்தஸிங் "ஆம். அப்படித்தான் செய்யவேண்டும்" என்றான்.

வேலைக்காரன் உடனே இவர்களை மங்கலாகத்தீபம் எரியும் ஒரு அறைக்கு அழைச்துச் சென்றான். சற்று நேரத்திற்குள் ஸர்தார் ஜீவரத்னம் பிள்ளையின் சகோதரர் அங்கு வந்தார். அவர் இருக்கும் அலங்கோலமான நிலைமை யங்குண்டாயிருக்கும் துக்க சம்பவத்தை வெளியிட்டது. ஆனந்தஸிங் அவனை நோக்கி, "உமது தமையனார் சங்கதியைக் கேட்க மிக்க விசனப்படுகிறோம். அவர் எப்படி யிறந்து போனார்?" என்று வினவினான்.

ஸர்தாரின் சகோதரர்:—"அந்தோ இது மிக்க கோரமான சம்பவம். என் தமையன் மிக்க நெறியுடையவர். சத்தியவான். கௌரவத்தைக் கவனிப்பவர். இப்போது நடந்திருக்கும் சம்பவம் அவர் மனதிற்குச் சகிக்க முடியாததாய் விட்டது. அது அவர் இருதயத்தைப் புண்படுத்தி விட்டது. அதனால் அவர் இருதயம் வெடித்து இறந்தார். அவர் தன் இலாகாவில் யாவும்

மிக்க நேர்மையோடும் நெறியோடும் ஒருவரும் எள்ளளவுகூடக் குறைகூறு வண்ணம் நடைபெறுகிறது என்பதில் மிக்க பெருமை பாராட்டிக்கொண்டிருந்தவர். இந்த விஷயம் அவருக்குச் சகிக்கொணுத பேரிடிபோலாய்விட்டது" என்ருர்.

ஆனந்த:—"அவர் இந்த விஷயத்திலுள்ள மர்மங்களை வெளியாக்கத்தக்க தகவல்கள் ஏதேனும் கூறுவார் என்று மிக்க ஆவல்கொண்டு வந்தோம்" என்ருன்.

அம்மனிதன்:—நான் உண்மையாய்க் கூறுகிறேன். நமக்கெல்லாம் இது எப்படி பெரிய மர்மமாகத் தோன்றுகிறதோ, அப்படித்தான் அவருக்கும் தோன்றியது. அவர் தன் கருத்தில் தோன்றிய யாவும் பூரணமாய்ப் போலீஸ் அதிகாரிகளிடம் கூறினர். ஆனல் கொட்டூர் வாதப்பன் துரோகம் செய்தான் என்பதைப்பற்றி மட்டும் அவருக்குச் சந்தேகமேயில்லை. ஆனல் அதைப் பற்றி மற்ற விஷயங்களனைத்தும் ஒன்றுமே புலப்படவில்லை.

ஆனந்தஸிங் "தாங்கள் இதைப்பற்றி ஏதேனும் அறிவிக்கக் கூடுமோ?" என்றபோது,

அவர் "எனக்கு நான் கேள்விப்பட்டதும் பத்திரிகைகளில் வாசித்ததும் தவிர வேறு ஒன்றுமே தெரியாது. உண்மையில் உங்களுக்கு அவமரியாதையாகத் தோன்றுமென்று அஞ்சுகிறேன். இச்சமயம் நாங்கள் இருக்கும் மனோ நிலைமையில் இந்த விஷயத்தைத்துரிதமாக முடித்து விடும்படிப் பிரார்த்திக்கிறேன்" என்ருன்.

ஆனந்தஸிங் "ஆம் ஆம், இச்சங்கதி தெரிந்திருந்தால் தங்களுக்கு இவ்வளவு தொந்திரையு மளித்திருக்கமாட்டோம். நாங்கள் விடைபெற்றுச் செல்கிறோம்" என்று கூறிவிட்டு எழுந்தான்.

இருவரும் வீட்டை விட்டு வெளி வந்து வண்டியில் ஏறியதும், ஆனந்தலிங் "இது ஒரு துர் அதிஷ்டமே. இது இயற்கையான மரணமோ அல்லது தற்கொலையோ என்பது எனக்குச் சந்தேகம். அது தற்கொலையாயிருந்தால் அவன் தானே மனவருத்தமடையத்தக்க குற்றத்தைச் செய்திருக்கவேண்டும். எப்படியிருந்தாலும் அதைப்பற்றிப் பிறகு யோசிக்கலாம். இப்போது நாம் கொட்டூர் வாதப்பன் வீட்டிற்குச் சென்று அங்கு என்ன சங்கதி கிடைக்கிறது என்று பார்ப்போம்" என்றான்.

வாதப்பன் வசித்திருந்த வீடு சிறிய வீடு. ஆனால் மிக்க நாணயமாகவும் சுத்தமாகவுமிருந்தது. வாதப்பன் தாயார் வீட்டிலிருந்தாள். அம்மாது சொல்லொணாத துயரத்தில் ஆழ்ந்து கிடந்தாள். அவளிடமிருந்து ஒரு சங்கதியையும் யறிய முடியவில்லை. ஆனால் அவள் பக்கத்தில் ஒரு இளம் வயதுள்ள கன்னிகை யுட்கார்ந்திருந்தாள். அவள் தான் வாதப்பன் மணயபுரியக்கருதியிருந்த வேத நாயகி என்ற கன்னிகை. அவளே அவன் இறக்குமுன் கடைசியாக அவனைப்பார்த்தவள்.

ஆனந்தலிங் அவளை நோக்கி "அம்மா! இது மிக்க துக்கமான விஷயமே. ஆயினும் அவனைக் கொன்றவர்களைக் கண்டு பிடிக்க வேண்டுமென்பது என்கருத்து. ஜனசமூகத்திற்கு நான் செய்யவேண்டிய கடமையுமதுவே. ஆகையால் நீ தயவு செய்து இதைப்பற்றி யுனக்குத் தெரிந்த சங்கதிகளைக் கூற விரும்புகிறேன்" என்றான்.

வேதநாயகி "அந்தோ நான் என்ன வென்று கூறுவேன். இச்சம்பவம் நடந்தது முதல் நான் சிந்தித்துச் சிந்தித்து இரவும் பகலும் கண்ணை மூடவே யில்லை. இதன் உண்மை யின்னதென்று எனக்கு விளங்கவே யில்லை. அவர் தேசாபிமானமும், சத்தியமும், சுத்த வீரத்தன்மையு

முடையவர். தன்னைநம்பியவர்களுக்கு, அதிலும் துரைத் தனத்தார்க்குத் துரோகம் அவர்கள் இரகசியத்தை விற் பதைவிடத் தன் கரத்தையே வெட்டி விடுவார். அவர் அப் படங்களைக் களவாடினாரென்பது சுத்த அசம்பாவிதமான காரியம். எள்ளளவேனும் நம்பத் தகாதது. இயற்கைக்கு நேர்மாறானது. அவரை யறிந்த ஒருவரும் அதை நம்பார் கள்." என்றாள்.

**ஆனந்த**:–இருக்கலாம். ஆனால் நடந்திருக்கும் உண்மைகள்.

**வேதநாயகி**:—ஆம் ஆம். அவைகளின் உண்மை மர்மத்தைக் கண்டறியக் கூடவில்லை.

**ஆனந்த**:—வரதப்பனுக்கு ஏதேனும் பணம் வேண்டி யிருந் ததோ ?

**வேத**:—இல்லை யில்லை. அவர் செலவு மிகக் கொஞ்சம். வரு மானம் அதிகம். பாங்கியில் சுமார் ஆயிரம் பவுன் சேர்த்து வைத்திருக்கிறார். நாங்கள் பிறக்கும் வருடா ரம்பத்தில் மணம் செய்து கொள்ளக் கருதி யிருந் தோம்.

**ஆனந்த**:—"அம்மா! என்னிடம் மனம் விட்டு யாவும் கூறு. அவன் மனதில் ஏதேனும் கலக்கம் இருந்ததோ!" என்றான்.

அச்சமயம் அவள் முகத்திலுண்டான மாறுதல் கொஞ் சமே யெனினும் சூக்ஷும புத்தியும் பார்வையுமுடைய ஆனந்தஸிங் அதை யுணர்ந்துகொண்டான்.

அவள் சற்று சமாளித்துக் கொண்டு "ஆம் அவர் மன தில் ஏதோ கலக்கம் இருந்ததாகவே யெனக்குத் தோன்றி யது." என்றாள். ஆனந்தஸிங் எவ்வளவு காலமாக என்று கேட்டதற்கு அவள் கடந்த சுமார் ஒருவாரமாகத்தான் அவர் மனவேதனைப் பட்டுக்கொண்டும் சிந்தித்துக்கொண்டு மிருந்தார். ஒரு சமயம் நான் நெருங்கிக்கேட்டேன். அவர்

தம்மனதில் ஒரு கலக்கம் இருப்பதாகவும் அது தமது உத்தியோக சம்பந்தமானதென்றும் ஒப்புக்கொண்டார். அதைப் பற்றி நான் உம்மிடம் பேசுவதுகூட அபாயம்" என்றாள்.

ஆனந்த:—அம்மா அவனுக்கு விரோதமான சங்கதி கூற நேர்ந்தாலும் அவசியமில்லை கூறிவிடு. அதனால் என்ன சம்பவிக்குமோ இப்போது தெரியாது.

வேதநாயகி:—உண்மையில் எனக்கு இதைவிட அதிகம் ஒன்றுமே தெரியாது. இரண்டொரு சம்பவங்கள் அவர் என்னிடம் ஏதோ கூற விரும்புவதாகத் தோன்றியது. ஒரு நாள் மாலை அவர் அந்த இரகசியம் மகா முக்கியமானது என்று கூறினார். அதோடு 'அதைப் பெறுவதற்கு அன்னிய நாட்டு வேவுகாரர் மிக்க பணம் கொடுப்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை' என்று அவர் கூறியதாகக் கொஞ்சம் நினைவிருக்கிறது" என்றாள்.

இதைக்கேட்டதே ஆனந்தஸிங் முகத்தில் ஒருவித தீட்சணியமுண்டாகியது. உடனே அவன் "இன்னும் ஏதேனுமுண்டோ?" என்றான்.

வேதநாயகி "அத்தகைய விஷயங்களில் தாம் பிறப்பட்டவரென்றும் அப்படங்களைக் கைப்பற்றுவது துரோகம் செய்யக்கருதும் ஒருவர்க்குச் சுலபமேயென்றும் கூறினார்" என்றாள்.

ஆனந்தஸிங் "அவ்வாறு கூறியது சமீப காலத்தில் தானோ?" என்றான். அக்கன்னிகை "ஆம் மிக்க சமீப காலத்திலேயே" என்றாள்.

ஆனந்த:—"இப்போது கடைசியாக நீங்கள் சந்தித்த அன்று மாலை நடந்த விஷயங்களைப்பற்றிக் கூறு" என்றான்.

வேத:—"நாங்கள் நாடகத்திற்குச் செல்லவிருந்தோம். மூடு பனி யதிகமாக விருந்ததால் வண்டி செல்ல முடிய

வில்லை. நாங்கள் நடந்தே சென்றபோது அவர் வேலை செய்யும் தொழிற்சாலை யோரமாகச் செல்ல வேண்டி யிருந்தது. அச்சமயம் அவர் திடீலென்று மூடுபனியில் பாய்ந்துசென்றார்" என்றாள்.

ஆனந்தஸிங் "ஒரு வார்த்தைகூடக் கூறாமலா சென் றான்?" என்றான். வேதநாயகி திடீலென்று "ஆ! கா!" என்று சத்தமிட்டுக் கொண்டே பாய்ந்து சென்றார். நான் நெடுநேரம் அங்கு நின்று காத்துக்கொண்டிருந்தேன். அவர் வரவேயில்லை. பிறகு நான் வீட்டிற்குத் திரும்பிவிட்டேன். மறுநாள் காலை உத்தியோகசாலை திறக்கப்பட்ட பின் இங்கு வந்து அவரைப்பற்றி விசாரித்தார்கள். பிறகு பனிரண்டு மணிக்கு இப்பயங்கரமான சங்கதி வந்தது. ஓ! ஆனந்தஸிங் உம்மை வெகுவாக வேண்டிக்கொள்கிறேன். அவர் கன்னி யத்தைக் காப்பாற்றும். அதை யவர் அதிகமாய் மதித்தார்" என்றாள்.

ஆனந்தஸிங் விசனத்தோடு தலை யசைத்துக் கொண்டே "விசுவநாதம்! நாம் வேறிடம் செல்லவேண்டிய திருக்கிறது. இப்போது நாம் கடிதங்கள் களவுபோன அந்தக் காரியாலயத்தைப் பார்க்கவேண்டும்" என்றான்.

இருவரும் வண்டியிலேறிய பின் வண்டி சென்று கொண்டே யிருக்கையில் ஆனந்தஸிங் "முன்னமே அவன் மேல் இக்குற்றம் பாரமாகவே யிருக்கிறது. நமது விசாரணை போகப்போக அதை யின்னும் அதிக பாரமாக்குகிறதாகவே தெரிகிறது. அவன் சமீபத்தில் மணம் புரிந்துகொள்ளக்கருதி யிருந்தான் என்பது அவனுக்குப் பணம் வேண்டியிருந் ததுஎன்பதைத் தெரிவிக்கிறது; அதனால் குற்றத்திற்கு ஒரு காரணம் ஏற்படுகிறது. அவன் அதைப்பற்றி யிப்பெண் ணிடம் பேசி இவளையும் அதற்குஉடந்தையாக்கி விட்டிருக்

கிறுன். இவை யாவும் மிக்க கெட்டதாகவே தெரிகிறது" என்றுன்.

விசுவ:—"ஆயினும், அவன் நடக்கையைக் கருதவேண்டாமா? அதோடு இந்தப்பெண்ணை யவ்வாறு திடீலென்று அவன் விட்டுவிட்டோட வேண்டியதேன்?" என்றுன்.

ஆனந்தஸிங் :—அதுதான் கேள்வி. உண்மையாகவே இதற்கு ஆட்சேபனைகளிருக்கின்றன. ஆனுல் இது ஒரு பிரம்மாண்டமான விவகாரமே" என்றுன்.

இவர்கள் காரியாலயத்திற்குச் சென்றபோது பிரதம லிகிதனுகிய சிங்காரம்பிள்ளையைச் சந்தித்தார்கள். அவன் ஆனந்தஸிங்கின் பெயரை யறிந்ததே யிவர்களை மிக்க மரியாதையாய் வரவேற்றுன். அவன் நடு வயதுடையவன்; சற்று மெலிந்ததேகி; அவன் மூக்குக்கண்ணுடி யணிந்துகொண்டு மனதிலிருந்த கலக்கத்தால் கைவிரல்களை நெறித்துக்கொண் டிருந்தான். ஆனந்தஸிங்கை நோக்கி "இது மிக்க வருத்தமான விஷயம். தலைவராகிய ஜீவரத்னம் ஸர்தாரின் மாணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டாயோ?" என்றுன்.

ஆனந்தஸிங் "இப்போது அவர் வீட்டிலிருந்து தான் வருகிறேும்" என்றுன்.

சிங்காரம் பிள்ளை:—இங்கு எல்லாம் கலவரமாயிருக்கிறது. தலைமையானவர் மடிந்தார். கொட்டூர் வாதப்பன் மடிந்தான். எங்கள் இரகசியக் கடிதங்கள் களவாடப்பட்டன. ஆயினும் திங்கட்கிழமை மாலை யிக்காரியாலயம் மூடப்பட்டபோது எல்லாம் ஒழுங்காகவே யிருந்தது. கடவுளே! இதை நினைக்கவும் நடுக்க முண்டாகிறது. எல்லாரைக் காட்டிலும் அந்த வாதப்பன் இப்படிச்

செய்தது தான் எனக்குப் பெரிய வியப்பாக இருக்கிறது" என்முன்.

ஆனந்தஸிங் "அப்படியாயின் அவன் குற்றம் செய்தான் என்று தாங்கள் நிச்சயமாய்க் கருதுகிறீர்களோ?" என்று கேட்டான்.

சிங்காரம்:—வேறு எவ்வழியும் எனக்குப் புலப்படவில்லையே. அப்படி யிருந்தும் என்மேல் எனக்கு எவ்வளவு நம்பிக்கையுண்டோ அவ்வளவு நம்பிக்கை யவன் மேலுண்டு.

ஆனந்த:—அன்று காரியாலயம் எந்நேரத்திற்கு மூடப்பட்டது?

சிங்காரம்:—சரியாக ஐந்து மணிக்கு.

ஆனந்த:—தாங்களே மூடினீர்களோ?

சிங்காரம்:—எப்போதும் நானே கடைசியாக இதைவிட்டு வெளிச்செல்பவன்.

ஆனந்தஸிங் அப்படங்கள் எங்கு வைக்கப்பட்டிருந்தன வென்று கேட்டதற்கு அவன் "அதோ அந்த இரும்புப்பெட்டியில்-அதில் நானே அவற்றை வைத்தேன்" என்முன்.

ஆனந்த:—இக் கட்டிடத்திற்கு காவலாள் வைக்கப்படுவதில்லையோ?

சிங்காரம்:—இருக்கிறுன். ஆனுல் அவனுக்கு வேறு இலாக்காக்களும் இருக்கின்றன. அக்காவற்காரான் ஒரு வயது முதிர்ந்த போர்வீரன். மிக்க நம்பிக்கையானவன். அன்று இரவு அவன் ஒன்றும் காணவில்லை. அன்று மூடுபனியும் அதிகமாக விருந்தது.

ஆனந்த:—அன்று வாதப்பன் தீபம் வைத்தபின் இக் கட்டிடத்திற்குள் பிரவேசித்து அக்கடிதங்களை யெடுப்

பதாயின் அவனிடம் மூன்று சாவிகள் இருந்திருக்க வேண்டு மல்லவா?

சிங்காரம்:—ஆம். இருக்கவேண்டும் - வெளிக்கதவு ஒன்று, உட்கதவு அதாவது அறையின் கதவு ஒன்று, இரும்புப் பெட்டியின் கதவு ஒன்று ஆக மூன்று சாவிகள் அவனிடமிருந்திருக்க வேண்டும்.

ஆனந்த:—ஸர்தார் ஜீவாத்னம் பிள்ளையும் தாங்களும் தானே இவற்றின் சாவிகளை வைத்துக்கொண் டிருக்கிறீர்கள்?

சிங்காரம்:—என்னிடம் இக்கதவுகளின் சாவிகளில்லை. இரும்புப் பெட்டியின் சாவிமட்டுமே யிருக்கிறது.

ஆனந்த:—ஸர்தார் ஜீவாத்னம் தன் நடக்கைகளில் எப்போதும் நேர்மையானவர்தானோ?

சிங்காரம்:—ஆம். அப்படித்தான் நான் கருதுகிறேன். எனக்குத் தெரிந்தவரையில் இந்த மூன்று சாவிகளையும் அவர் ஒரே வளையத்தில் மாட்டி வைத்துக்கொண்டிருந்தார். நான் அடிக்கடி அச்சாவிகள் அவ்வாறு அவரிடமிருப்பதைக் கண்டிருக்கிறேன்.

ஆனந்த:—அவர் சாவிகளுள்ள அவ்வளையத்தோடேயா இரத்தனபுரிக்குச் சென்றார்?

சிங்காரம்:—ஆம். கூடவே கொண்டு சென்றார்.

ஆனந்த:—உமது சாவி உம்மிடமே யிருந்ததல்லவா?

சிங்காரம்:—ஆம். ஒரு விநாடிகூட என்னைவிட்டுப் போகவில்லை.

ஆனந்த:—அப்படியாயின் வரதப்பன் குற்றம் செய்திருந்தால் அவனிடம் வேறு சாவிகளிருந்திருக்க வேண்டும். அப்படி யிருந்தும் அவனிடமிருந்து ஒன்றுகூட அகப்படவில்லை. அக்கடிதங்களை மறுபடி ஒருவரும் காணுமுன் பெட்டியில் கொண்டுவந்து வைத்து விடு

வதற்காக இச்சாவிகள் அவனிடமிருந்தே யிருக்க வேண்டும். இதே காரியாலயத்திலிருக்கும் ஒரு இலிகிதன் இப்படங்களைக் களவாடி விற்பதெனின், அவற்றின் அசலையே வெளியில் எடுத்துப்போய்ப் பிறகு கொண்டுவந்து வைப்பதைவிட அவற்றின் நகலை யெடுத்துச் செல்வது மிக்க சுலபமல்லவா?

சிங்காரம்:—அப்படங்களின் நகல் எடுக்கவேண்டுமாயின் அத்தகைய படங்கள் எழுதும் முறைமையில் நன்றாகப் பழகியவனாக விருக்கவேண்டும்.

ஆனந்த:—உமக்காவது, ஸர்தார் ஜீவரத்னம் பிள்ளைக்காவது, வரதப்பனுக்காவது அந்தத் திறமை யில்லை யென்று கருதுகிறேன்.

சிங்காரம்:—எங்களுக்கு அத் திறமை யுண்டுதான். ஆனால் ஆனந்தலிங்! என்னை இந்த விஷயத்தில் இழுக்கமாட்டாயென்று வேண்டிக்கொள்கிறேன். அசல் படங்கள் வரதப்பன் ஜேபியிலிருந்த வரையில் இந்த உத்தேசங்களா லெல்லாம் என்ன பயன்?

ஆனந்த:—ஆயினும் அவற்றின் நகலே அவன் காரியத்திற்குப் போதுமானதாக விருக்கும் போது அவன் ஆபத்துக் கிடமுண்டாகுமாறு ஏன் அசலையே யெடுத்துக் கொண்டு போகவேண்டும்?

சிங்காரம்பிள்ளை:—ஆம். இது அபூர்வமான செய்கை யாகவே யிருக்கிறது. ஆயினும் இவ்வாறு அவன் செய்திருக்கிறான்.

ஆனந்த:—இந்த விவகாரத்தைப் பற்றி செய்யப்படும் ஒவ்வொரு ஆராய்ச்சியும் ஒவ்வொரு விளங்காத மர்மத்தை வெளியிடுகிறது. இப்போதும், காணாமற் போன படங்கள் இன்னும் மூன்றிருக்கின்றன. எனக்

குத் தெரிந்த வரையில் அவை முக்கிய மானவைக ளென்றே தெரிகிறது.

சிங்காரம்பிள்ளை ஆம் அது மட்டு முண்மையே யென் றார். ஆனந்தஸிங் "இந்த ஏழு படங்களல்லாமல் அம் மூன்று படங்களை மட்டும் வைத்துக் கொண்டிருப்போர் அப்புதிதாய்ச் செய்யப்படும் நீர் மூழ்கிக் கப்பலைச் செய்து விடலாகுமோ?

சிங்காரம்:—நான் அவ்வாறு கூடுமென்றே கடற்படை யிலாகா அதிகாரிகளுக் கறிவித்து விட்டேன். ஆனால் நான் மறுபடி மீதியிருந்த படங்களைச் சோதனை செய்த போது இவற்றிலுள்ள இன்னொரு படமில்லாமல் அவன் செய்வது கஷ்டம். ஆனால் அதையவர்களே கண்டு பிடித்துக் கொள்ளலாகும் என்று தெரிந்தது. அதையவர்கள் கண்டு பிடிக்கிறவரையில் அக்கப்பலைச் செய்யமுடியாது.

ஆனந்தஸிங் "ஆயினும் காணமற்போன அம்மூன்று படங்களும் மிக முக்கியமானவை யல்லவா?" என்றான். சிங்காரம்பிள்ளை "ஆம் ஆம். சந்தேகமில்லை" என்றான்.

அதன்மேல் ஆனந்தஸிங் நான் இந்த இடத்தைக் கொஞ்சம் சுற்றிப்பார்க்கிறேன் என்று கூறிவிட்டு இரும்புப் பெட்டியின் பூட்டு, அறையின் கதவு இவற்றைப் பார்த்து விட்டுக் கடைசியாகச் சாளரத்தைப் பார்த்தான். அச்சாள ரத்தில் இரும்புத் தகட்டால் செய்த கதவுகள் இருந்தன. இவற்றை யெல்லாம் பார்த்து விட்டுக் கடைசியில் வெளியி லுள்ள பிரதேசத்தைப் பார்வை யிட்டபோது தான் அவன் மனதில் உறுதியான ஒரு விசாரம் தோன்றியது. அச்சாள ரத்திற்கு வெளியில் ஒரு விதப் புஷ்பச் செடிகள் குத்துச் செடிகளிருந்தன. அவற்றின் கிளைகளில் பல வளைக்கப் பட்டும் ஒடிக்கப்பட்டு மிருந்தன. ஆனந்தஸிங் தன் பூதக்

கண்ணாடியால் அவற்றை நன்ருய்க் கவனித்துப் பார்த்தான். பிறகு அங்கு தரையில் இலேசாக விருந்த சில குறிகளை யும் கவனித்தான். அதன் பிறகு ஆனந்தஸிங் அந்தச் சாளரத்தின் இரும்புக் கதவுகள் இரண்டையும் மூடும்படி கூறினுன். அவற்றை மூடியபோது இரண்டு கதவுகளுக்கு மிடையில் கொஞ்சம் சந்திருந்தது. அவன் அதைக் குறிப் பாய்க் காட்டி, "இதோபார்! இவ்வழியாய் ஒருவர் அறைக் குள் என்ன நடக்கிறதென்று கண்டறியலாம்" என்ருன்.

"களவும் கொலேயும் நடந்தது திங்கள் இரவு. இவர்கள் சோதனை செய்வது வியாழக்கிழமை. இந்த மூன்று நாட் களில் இருக்கக் கூடிய அத்தாட்சிகளெல்லாம் வெகுவாய்க் கலேந்து போயின." என்று ஆனந்தஸிங் சிங்காரம்பிள்ளை யிடம் கூறிவிட்டு விசுவநாதனை நோக்கி, "விசுவநாதம்! இங்கு நாமறியக்கூடியது இன்னுமேதேனு மிருப்பதாக எனக்குப் புலப்படவில்லே. இங்கு நமக்கு அகப்பட்டது சொல்பமே. இரத்தினபுரியில் ஏதேனும் கிடைக்குமோ வென்று பார்ப்போம்" என்ருன். ஐந்தாறு நிமிடங்களில் இருவரும் சிங்காரம்பிள்ளையிடம் விடை பெற்றுக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டு வல்லூர் ஸ்டேஷனுக்குச் சென் ருர்கள்.

---

## 4-வது அத்தியாயம்.

ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் வல்லூர் ஸ்டேஷ னுக்குச் சென்றதே அங்குபிரயாணச்சிட்டுகளைவிற் கும் இலிகிதன் அவனுக்கு அறிமுகமானவனுதலால் ஆனந் தஸிங் அவனைக்கண்டு சம்பாஷிக்கத்தொடங்கி மெதுவாய்க் கொட்டூர் வாதப்பனைப்பற்றிய விஷயத்தைப் பிரஸ்தாபித் தான். வாதப்பனை அந்த இலிகிதனுக்கு நன்ருகத் தெரியுமா

தலால் அவன் "வரதப்பன் கடந்த திங்கள் இரவு எட்டரை மணிக்கு இங்கிருந்து புறப்படும் வண்டியில் சென்றான் என்றும், நகரப்பால ஸ்டேஷனுக்கு ஒரு மூன்றாவது வகுப்புப் பிரயாணச்சீட்டு மட்டுமே வாங்கிக்கொண்டு சென்றானென்றும், அவன் தனியாகவே யிருந்தானென்றும், கூறினான். அதோடு அச்சமயம் வரதப்பன் மனத்துடிப்பும் கலக்கமுமுடையவனாகக் காணப்பட்டதைக்கண்டு தான் வியப்படைந்ததாகவும், தான் கொடுத்த சில்லரைப் பணத்தை யெடுக்க அவன் கைவிரல்கள் உதரலெடுத்ததால் தான் அவற்றை யெடுத்துக் கொடுத்ததாகவும் கூறினான். எட்டரை மணிக்குப் புறப்பட்ட வண்டிதான் வரதப்பன் தன் காரியாலத்தை விட்டுப் புறப்பட்டபின் செல்லக்கூடிய முதல் வண்டி. ஏனெனில் அவன் தன் காதலியைவிட்டுப் பிரிந்தபோது ஏழரைமணி.

அரை மணிநேரம் பேசாமலிருந்தபின் ஆனந்தஸிங் விசுவநாதனை நோக்கி, "நண்பனே! இப்போது மறுபடி யாவும் கவனிப்போம். இதுகாறும் நாம் இருவரும் சேர்ந்து ஆராய்ச்சிசெய்த விஷயங்களில் இதைப்போல் உண்மை கண்டறியக் கஷ்டமானது ஒன்றுகூட இல்லை. நாம் செய்கிற ஒவ்வொரு புது முயற்சியும் எதிரில் ஒருபுதுக் கால் வாயை வெளியிடுகிறது. ஆயினும் நாம் கொஞ்சமேனும் அனுகூலமே யடைந்தோம்.

நாம் வல்லூரில் செய்த ஆராய்ச்சியெல்லாம் வரதப்பனுக்கு விரோதமாகவே முடிகின்றன. ஆனால் சாளரத்தில் ஏற்பட்ட விஷயங்கள் வேறு விதமான விஷயங்களை வெளியிடலாகும். திருஷ்டாந்தத்திற்குக் கூறுகிறேன். அவனிடம் அந்த அன்னியநாட்டுக் காரியஸ்தன் எவனேனும் நெருங்கியிருப்பான். நடந்த சங்கதி அதை வெளியிடக்கூடாத நிபந்தனைகளை யுடையதாயிருக்கும். அவன் அதற்குச் சம்மதிக்கா

விட்டாலும் எப்படியேனும் வேறு யார் மூலமாகவேனும் அவன் அக்காரியத்தை யெங்கே முடித்துக் கொள்வானோ. நாம் எச்சரிக்கை செய்வதற்கில்லையே யென்று வருத்த மடைந்தான். அவன் தன் காதலியிடம் வருத்தத்தோடு கூறிக்கொண்ட மாதிரியால் இது தெரிகிறது. நல்லது, பிறகு அவன் தன் காதலியோடு நாடகத்திற்குச் சென்றுகொண் டிருக்கையில் காரியாலயத்திற்கருகில் மூடுபனியில் தன்னி டம் பேசிய அதே காரியஸ்தன் காரியாலத்தை நோக்கிச் செல்வதைக் கண்டான். உடனே அவன் தன் கடமையைக் கருதி நிபந்தனை முதலிய யாவற்றையும் மறந்து, அம்மனி னைத் தொடர்ந்து சென்றான். சாளரத்தருகில் சென்ற போது அக்கடிதங்கள் களவாடப்படுவதைக் கண்டு கள்ள னைத் துரத்திச் சென்றான். இதனால் அக்கடிதங்களை நகல் எடுத்துக்கொண்டு போகக்கூடியதாக இருக்கையில் அச லையே யேன் எடுத்துச் செல்லவேண்டும் என்ற ஆக்ஷே பனைக்கு இடமில்லாமற் போகிறது. இது வரையில் யாவும் பொருத்தமாகவுமிருக்கிறது. அந்த அன்னிய மனிதன் மேலும் இரவில் களவாடிச் செல்பவன் அசலைத்தான் கொண்டுபோக வேண்டும்" என்றான்.

விசுவ:—"இதற்குமேல் விவகாரம் என்ன?" என்றான்.

ஆனந்த:—"அதுதான் பெரிய கஷ்டத்திலிருக்கிறது. இப் போது களவாடப்படுவதைக் கண்டதே கொட்டூர் வா தப்பன் செய்யவேண்டிய காரியமென்ன? உடனே கள்ளனைப் பிடித்துக்கொண்டு கூச்சலிடவேண்டும் என்று தான் யாவரும் எதிர் பார்ப்பார்கள். வரதப்பன் அப்படிச் செய்யவில்லை. அல்லது செய்ததாகத் தெரியவில்லை. என்? ஒரு சமயம் களவாடியவன் தனக்குமேல் இருக்கும் உத்தியோகஸ்தனாக விருந் தால் அவன் அப்படிச்செய்ய முடியாது. அப்படியே

யிருக்கட்டும். கள்ளனாகிய மேலதிகாரி மூடுபனியில் மறைந்து ஓடிவிட்டிருந்தால் வாதப்பன் என் செய்வது? முன்னாடி நகரத்திற்குச்சென்று அவனுக்குமுன்பு அவன் வீட்டில் காத்திருப்போம் என்று கருதி யிருப்பான். அவன் வீடு இவனுக்குத் தெரிந்திருக்கும். அச் சந்தர்ப்பம் எவ்வளவோ முக்கியமானதாக விருந்திருந்த படியால்தான் அவன் தன் காதலியை யப்படித் திடீலென்று வழியில் விட்டுவிட்டு மறுபடி அவளைப் பார்க்கவும் செல்லவில்லை. இங்கிருந்து நமது மோப்பம் அடியோடு விட்டுப்போகிறது. அதுமுதல் வாதப்பன் சவம் அந்த எழுகடி தங்களைச் சேபியில் வைத்துக் கொண்டு நகரத்திலிருந்து செல்லும் இரயில் வண்டியின் கூரைமேல் போய்ச் சேர்ந்த வரையில் வெறு சூனியமாக விருக்கிறது. என் புத்திக்கு இதை வேறு முனையிலிருந்து தொடர்ந்து பார்க்கவேண்டு மென்று தோன்றுகிறது. என் தமையன் அந்த வெளி நாட்டு ஆசாமிகளின் பெயர்களை யனுப்பினால் அவர்களில் நமது ஆள் யாரென்று கண்டுகொள்ளலாம். அப்போது ஒரு வழிக்குப் பதிலாக இரண்டு வழிகளில் ஆராய்ச்சி செய்யலாம்" என்றான்.

இவர்கள் வீடுபோய்ச் சேர்ந்தபோது, அங்கு மோகன் ஸிங்கால் அனுப்பப்பட்ட ஆள் கடிதத்தோடு காத்துக் கொண்டிருந்தான். ஆனந்தஸிங் அதை வாசித்துப்பார்த்து விட்டு விசுவநாதனிட மளித்தான். அதில் கீழ்க்கண்ட பெயர்களோடு இன்னும் சில பெயர்கள் எழுதப்பட்டிருந்தன:—

"(1) மாரியப்பன், மேற்கு வீதி இலக்கம் 10, (2) கண்ணப்பன் மேட்டு வீதி, (3) உத்தமநாதன், இலக்கம் 13 கொல்லைத்தெரு கண்ணம்பட்டி-நந்தவனம் என்ற வீடு.

இவற்றோடு கூட, இவர்களில் உத்தமநாதன் திங்கட்கிழமை நகரத்தில் இருந்திருக்கிறனென்றும் இப்போது வெளியில் போய்விட்டிருக்கிறனென்றும் தெரிய வருகிறது. நீ கொஞ்சம் வெளிச்சம் தெரிகிறதென்பதையறிய மிக்க சந்தோஷமடைகிறேன். மந்திரி சபை உன் முடிவான சமாசாரத்தை மிக்க ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. மிக்க உயர்ந்த விடத்திலிருந்து மிக்க அவசரமான கேள்வி வந்திருக்கிறது. இராஜாங்கத்தின் முழு பலமும் உனக்கு அவசியமானபோது உதவி செய்ய ஆயத்தமாகவிருக்கிறது—மோகன்ஸிங்"

விசுவநாதன் இதை வாசித்துப்பார்த்து ஆனந்தஸிங்கின் முகத்தை நோக்கினன். ஆனந்தஸிங், "இதில் அனேகம் சில்லரை யாசாமிகளிருக்கிறர்கள்; ஆனல் இத்தகைய பெரிய விவகாரத்தில் கையிடத்தக்கவர்கள் மிகச் சிலரே. மேற்கண்ட மூன்று ஆசாமிகளே கவனிக்கக் கூடியவர்கள். துரைத்தனத்தாரின் குதிரைப் படைகள் காலாட்படைகள் எல்லாம் சேர்ந்தாலும் இந்த விஷயத்தில் ஒரு மயிரிழையும் அசைக்கமுடியாதென்றஞ்சுகிறேன்" என்று கூறிவிட்டு இரத்னபுரி நகரத்தின் பெரிய படத்தை முழங்கால்கள் மேல் விரித்து வைத்துக்கொண்டு ஆவலோடு குனிந்து அதைச் சற்று நேரம் நோக்கினன். பிறகு தட்டென்று நிமிர்ந்து திருப்திகரமான தொனியாய் "நல்லது, நல்லது. கடைசியில் விவகாரம் நமக்கு அனுகூலமான வழியாய்க் கொஞ்சம் திரும்புகிறது. ஏன்? விசுவநாதம்! கடைசியில் நாம் இதைக் கண்டு பிடித்துவிடுவோம் என்று உண்மையாகவே நம்புகிறேன்" என்று கூறிக்கொண்டே மிக்க சந்தோஷத்தோடு விசுவநாதன் தோள்மேல் தட்டினன்.

விசுவநாதன் வியப்படைந்து ஆனந்தஸிங்கை யுற்று நோக்கினன். ஆனந்தஸிங் "நான் இப்போது வெளியிற்

செல்கிறேன். என் மனமார்ந்த நம்பிக்கையுடைய தோழனாகிய உன்னைக் கூட வைத்துக்கொள்ளாமல் விசேஷமான ஒரு காரியமும் செய்யேன். ஒரு விஷயத்தைப்பற்றி பார்வையிட்டு வரவே செல்கிறேன். நீ தயவுசெய்து இங்கேயேயிரு. ஒருமணி அல்லது இரண்டு மணி நேரத்தில் வந்து விடுவேன். அப்படி யுனக்குக் காலம் கழிப்பது கஷ்டமாகத் தோன்றினால் கடைசியாக நாம் இராஜாங்கத்திற்குச் செய்த உதவியைப்பற்றிய சரித்திரத்தை யெழுதத் தொடங்கு" என்று கூறிவிட்டு இரண்டொரு நிமிடங்களுக்குள் வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

ஆனந்தஸிங் கூறிய மாதிரியால் விசுவநாதன் மனதிலும் சந்தோஷம் உண்டாயிற்று. ஏனெனில் ஆனந்தஸிங் எப்போதும் மர்மமாகவும் சிந்தனையோடுமே யிருப்பவன். அவன் மனதில் நிச்சயமாய் ஜெயமுண்டாகும் என்ற நம்பிக்கையில்லாவிட்டால் அவன் அவ்வாறு சந்தோஷமாய் நம்பிக்கையோடு நாம் இதைக்கண்டு பிடிப்போம் என்று கூறவே மாட்டான். ஆகையால் இவனுக்கு ஏதோ நம்பிக்கையான உளவு அகப்பட்டிருப்பதால் இவன் அவ்வாறு கூறுகிறனென்று விசுவநாதன் உணர்ந்து கொண்டான். அதன் மேல் பேசாமல் அவன் வரவிற்கு எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தான். நெடுநேரம் காத்திருந்தான். கடைசியில் இரவு ஒன்பது மணிக்கு ஒரு ஆள் ஒரு கடிதம் கொண்டு வந்து விசுவநாதனிடமளித்தான். அதில்,

"நான் கண்ணம்பட்டியில் கொல்லர் வீதியிலிருக்கும் தங்க விலாசம் என்ற ஹோட்டலில் இராப்போஜனம் செய்கிறேன். நீ யுடனே புறப்பட்டு அங்கு என்னிடம் வந்து சேரவேண்டும். ஒரு ஜிம்மி, ஒரு உளி, ஒரு போலீஸ் இராந்தல், ஒரு கைத்துப்பாக்கி இவற்றைக் கையில் கொண்டுவா-ஆ.ஸி" என்று எழுதப்பட்டிருந்தது.

விசுவநாதன் அவ்வாறே மேற்கண்ட பொருள்களை யெடுத்துப் பத்திரமாகத் தன் உட்சட்டைக்குள் மறைத்து வைத்துக்கொண்டு உடனே ஒரு வண்டியிலேறி நேராய்த் தங்க விலாசம் ஹோட்டலுக்குச் சென்றான். அச்சமயம் ஆனந்தஸிங் ஒரு மேஜை யெதிரில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அவன் விசுவநாதன் அருகில் வந்ததும் "வா! இப்படி யுட்கார். நீ ஏதேனும் புசித்தாயா—என் கூடப் போசனம்செய். நான் கேட்ட வஸ்துக்களைக் கொண்டுவந்தாயா?" என்றான்.

விசுவநாதன் "அவை யிதோ என் உள் மடியிலிருக்கின்றன" என்றான்.

ஆனந்த:—"மிக்க சந்தோஷம். இப்போது நான் செய்த வேலைகளையும் இனி நாம் செய்யவேண்டியவற்றையும் சுருக்கமாகக் கூறுகிறேன். விசுவநாதம்! வரதப்பன் சவம் வண்டியின் மேல்கூரையில் வைக்கப்பட்டிருந்த தென்பது உனக்கு நன்றாய் விளங்கிவிட்டிருக்கவேண்டும். அச்சவம் வண்டியிலிருந்து கீழே போடப்பட வில்லை யென்றும், வண்டியின் கூறைமே லிருந்தே விழுந்திருக்க வேண்டுமென்றும் நான் ஒரே தீர்மான மாகக் கூறிய போதே உனக்கு அவ்வுண்மை விளங்கி விட்டிருக்க வேண்டும்" என்றான்.

விசுவ:—என் வேறே மார்க்கமில்லையோ?

ஆனந்த:—வேறு வழியே யில்லை. வண்டியின் மேல் கூரை வட்டமாய் இரண்டு பங்கங்களிலும் சரிவாயிருக்கிறது. ஓரத்தில் கிராதியில்லை. ஆகையால் சவம் அங்கிருந்து விழுந்த தென்றே கட்டாயம் நிச்சயமாய்க் கூறலாம். அதோடு அவன் கொல்லப்பட்டது வண்டியிலல்ல வென்று நன்றாகத் தெரிகிறது. வண்டியில் கொல்லப்

பட்டதாக விருந்தால், எந்த வண்டியிலாவது சச்சரவு நடந்த குறியிருக்கும். பாதையிற் கொஞ்சமேனும் இரத்தம் சிந்தியிருக்கும். எங்கோ ஒரு யிடத்தில் கொலை நடந்ததால், இரத்தமனைத்தும் அங்கே சிந்தப்பட்டது. அதற்றான் சவமிருந்த இடத்தில் கொஞ்சங் கூட இரத்த மில்லை." என்றான்.

விசுவ:—"அவன் சவம் எவ்வாறு வண்டியின் கூரை மேல் வந்திருக்கும்?" என்று வினவினன்.

ஆனந்த:—"அக்கேள்விக்கு விடை தான் நாம் கண்டறிய வேண்டும். இதற்கு ஒரு வழி தான் இருக்கிறது. நான் அப்பாதையின் வழியாய் ஒரு சமயம் பிரயாணம் செய்தது எனக்கு நினைவிருக்கிறது. அவ்வழியில் ஆங்காங்கு தலைக்கு மேல் பக்கங்களில் சாளரங்களிருப்பதைக் கண்டிருக்கிறேன். இப்போது அத்தகைய சாளரம் இருக்கு மிடத்திற்குச் சரியாக ஒரு வண்டித் தொடர் செல்கிறதென்று வைத்துக் கொள்வோம் ஒரு சாளரத்திலிருந்து ஒரு சவத்தை வண்டியின் கூரைமேல் போடுவது கஷ்டமோ?" என்றான்.

விசுவ:—அது அசம்பாவிதமென்றே புலப்படுகிறது.

ஆனந்த:—வேறு எந்த வழியும் சரிப்படாதபோது, அசம்பாவிதமாகத் தோன்றும் வழியில் கூட நுழைந்து பார்க்கவேண்டியதே. ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் அதுவே கடைசியில் உண்மையாக முடியும். இப்போது ஊரை விட்டு வெளிச் சென்றிருக்கும் வெளி நாட்டு ஆசாமி அத்தகைய வீடுகளில் ஒன்றில் தான் வசித்துக்கொண் டிருந்தான் என்பதை யறிந்ததே எனக்குண்டான சந்தோஷத்தைக் கண்டு தான் நீ வியப்படைந்தாய்" என்றான்.

விசுவ:—"ஓகோ! அப்படியா சங்கதி? இம்மாதிரியா விவகாரம் இருக்கிறது?" என்றான்.

ஆனந்த:—"ஆம். இதுவே யிருக்கிற விஷயம். கண்ணம்பட்டி கொல்லத் தெரு 13-வது எண்ணுள்ள வீட்டிலிருந்த உத்தமநாதன என்பவன் மேல் தான் என் நாட்டம் வீழ்ந்தது. நான் அவ்வீட்டிற்கு அருகிலுள்ள யில் ஸ்டேஷனிலிருந்தே என் ஆராய்ச்சியைத் தொடங்கினேன். நற்காலமாய் கபட மற்ற ஒரு இரயில் இலாகா உத்தியோகஸ்தர் அங்கிருந்து என் கூடப் பேசிக் கொண்டே வந்தார். அவர் சம்பாஷணையால் நந்தவனம் என்ற அந்த வீட்டின் பின் பக்கச் சாளரங்கள் இரயில் வண்டி செல்லும் பாதையின் பக்கம் இருக்கின்றன வென்றும், அங்கு எதிர் வண்டி சந்திப்பதால் பாதை இரண்டாய்ப் பிரிந்திருப்பதாகவும் அடிக்கடி வண்டி யங்கு சுமார் பத்து நிமிட முதல் இருபது நிமிடம் வரைத் தங்கி யிருப்ப துண்டென்றும் கூறினர். அப்பாதைப் பிரிவு அவ்வீட்டுச் சாளரங்களுக்கு எதிரிலிருக்கின்றன." என்றான்.

விசுவ:—ஓ! அப்படியா யிருக்கிறது?

ஆனந்த:—ஆம். அப்படியே யிருக்கிறது.

விசுவ:—அப்படியாயின் மிக்க நேர்த்தி. நீ ஆளைப் பிடித்து விட்ட மாதிரியே.

ஆனந்த:—இரு. அது வரையில் செல்லலாம். ஆயினும் முடிவு வெகு தூரத்திலிருக்கிறது. நான் சென்று அவ்வீட்டின் பின் பக்கத்தைப் பார்த்தேன். பிறகு முன் பக்கத்தைப் பார்த்தபோது ஆசாமி ஓடி விட்டான் என்பது நிச்சயம் எனத் தெரிந்தது. நான் ஊகிக்கிற வரையில் அவ்வீடு விசாலமானது. மேல் பாகம் சாமான்களோடு கூடியதல்ல. உத்தமநாதன்

அதில் ஒரே வேலைக்காரனோடு வசித்துக்கொண்டிருந்தான். அந்த வேலைக்காரன் பெரும்பாலும் பூரணமாக அவனுக்கு உடந்தையானவனாகவே யிருக்கும். உத்தம நாதன் இப்போது அக்கடிதங்களைக் கொண்டு போய்க் கொடுத்து பணம் வாங்கச் சென்றிருக்கிறானே யன்றி ஓடிவிடவில்லை. ஏனெனில் தன்னைப் பிடிக்கவாரன்ட் பிறக்கும் என்ற அச்சம் அவனுக்கில்லை. குழப்பமடங்கு மட்டும் எங்கேனும் சென்றிருப்போம் என்றயோசனை யவனுக்குதியாது. ஆயினும் நாம் இப்போது அதையே செய்யப்போகிறோம்.

விசுவநாதன் "நாம் இப்போது அவன் மேல் வாரன்ட் பிறப்பிக்கக் கூடாதோ?" என்றதற்கு ஆனந்தஸிங் "இந்த ருசுவின் மேல் பிறப்பிக்க முடியாது" என்றான்.

விசுவ:—நாம் என்ன உத்தேசிக்கலாம்?

ஆனந்த:—அங்கு எத்தகைய கடிதங்கள் அகப்படுமோ?

விசுவ:—ஆனந்தஸிங்! இது எனக்குப் பிரியமில்லை.

ஆனந்த:—"நண்பனே! நீ வீதியில் காவலிரு. கள்ளன் வேலையை நான் செய்கிறேன். அற்ப விஷயங்களுக்கெல்லாம் பின்னிட இது சமயமல்ல. என் சகோதரியையும், கடற்படை இலாகா, மந்திரிகள் சபை, இதைப் பற்றிய சமாசாரத்தை யறிய ஆவலோடிருக்கும் முதல் ஆசாமியையும் நினைத்துப்பார். நாம் செல்லக்கடமைப் பட்டிருக்கிறோம்" என்றான்.

விசுவநாதன் உடனே எழுந்து நின்று "ஆம். ஆனந்தஸிங். நாம் கடமைப்பட்டிருக்கிறோம்" என்றான். ஆனந்தஸிங் சந்தோஷத்தோடெழுந்து விசுவநாதன் கரங்களைப் பற்றிக் குலுக்கி, "முடிவில் நீ பின்வாங்க மாட்டாயென்று நானறிவேன். அது அரைமைல் தூரமிருக்கிறது. ஆயினும் அவசரமில்லை. நாம் நடந்து செல்வோம். கையி

விருந்த சாமான்களைக் கீழே போட்டுவிடாமல் ஜாக்கிரதை யாயிரு. இச்சமயத்தில் உன்னைச் சந்தேகப்பட்ட ஆசாமி யாகப் பிடித்துக்கொண்டால் வேடிக்கைதான்" என்றான்.

நந்தவனம் என்ற அவ்வீடு நகரத்தின் மேற்குக்கோடி யில் இருக்கிறது. அது இருக்கும் வீதியில் எல்லா வீடுக ளும் ஒன்றைப்போல் முன் பக்கம் கம்பங்கள் வைத்த உயரமான மண்டபத்தை யுடையவை. அன்றைய தினம் அவ் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் சிறுவர்கள் கேளிக்கை நடப்பதுபோல் தெரிந்தது. சிறுவர்கள் பேசுவதும் சிறிப் பதுமான சத்தம் பலமாக விருந்தது. பியானோவாத்திய மும் முழங்கியது. மூடுபனி இன்னும் இருந்து கொண்டே யிருந்ததால் இவர்கள் இருவருக்கும் மிக்க அனுகூலமாக விருந்தது.

---

## 5-வது அத்தியாயம்

ஆனந்தலிங்கும் விசுவநாதனும் அவ்வீட்டருகிற் சென்றதும் ஆனந்தலிங் தன் இராந்தலைத் திறந்து அவ்வெளிச்சத்தில் கதவைப் பார்த்துவிட்டு சட்டென்று இராந்தல் வெளிச்சத்தை மூடிக்கொண்டு "விசுவநாதம்! இங்கு வேலை செய்வது மோசமாகும். இது பலமான கதவு; அதோடு தாளிட்டுப் பூட்டப்பட்டிருக்கிறது. பின் பக்கம் தான் செல்லவேண்டும். அங்கு போலீஸ்காரன் வந்தாலும் மறைந்துகொள்ள ஒரு சந்திருக்கிறது. என் காத்தைப் பற்றிக்கொள்" என்றான்.

அவ்வாறே இருவரும் இருள் சூழ்ந்த சந்து வழியில் நுழைந்து பின் பக்கம் கதவருகிற் சென்றார்கள். அவர்கள் அங்கு சென்று நின்றதே சற்று தூரத்தில் போலீஸ்காரன் நடக்கும் சத்தம் கேட்டது. அச்சத்தம்

தூரத்தில் மறைந்ததும் ஆனந்தஸிங் வேலைசெய்யத் தொடங்கினான். இரண்டொரு நிமிடங்களில் கிளிக் என்ற சத்தம் உண்டானதும் கதவு திறந்துகொண்டது. இருவரும் உள்ளே நுழைந்து கதவை மூடிக்கொண்டு அங்கிருந்த படிகளில் ஏறிச்சென்றார்கள். ஆனந்தஸிங்கின் கரத்திலிருந்த இராந்தல் வெளிச்சத்தால் மேலே ஒரு தாழ்வான சாளரம் இருப்பது தெரிந்தது.

அந்த விடத்தில் சென்று நின்றதும் ஆனந்தஸிங் "ஆ! இந்த இடமாகத்தான் இருக்கவேண்டும்" என்று கூறிக்கொண்டே அச்சாளரத்தைத் திறந்தான். அச்சமயம் ஒரு இரயில்வண்டித் தொடர் அவ்வழியே சென்றது. ஆனந்தஸிங் இராந்தல் வெளிச்சத்தைச் சாளரத்தில் காட்டினான். சாளரக்கதவு இரயில் புகைப்பட்டு கரேலென்றிருந்தது. ஆனந்தஸிங் அங்கிருந்த மரச்சட்டத்தையும் அதன் பக்கத்திலும் குறிப்பாய்க்காட்டி "இதோ அவர்கள் சவத்தை வைத்த இடம்-ஆ-ஆ இங்கு பார் இரத்தக்கறை" என்றான். பிறகு பார்த்ததில் வேறிடங்களிலும் இரத்தம் சிந்தப்பட்டிருந்தது. ஆனந்தஸிங் "விசுவநாதம் இனிச் சந்தேகம் இல்லை. ருசு பூரணமாக அகப்பட்டுவிட்டது. நாம் ஒரு இரயில் வண்டித்தொடர் இங்கு வந்து நிற்குமட்டும் காத்திருப்போம்" என்றான்.

சுமார் கால்மணி நேரம் கழித்துவந்த வண்டித்தொடர் துவாரத்தைவிட்டு வெளிப்பட்டதும் வேகம் குறைந்தது. இரண்டொரு விநாடிகளில் அது அச்சாளரத்திற்கு நேராய் வந்து நின்றுவிட்டது. ஆனந்தஸிங் சாளரத்தில் தலையை நீட்டிப் பார்த்தான். வண்டிகளில் மேல்கூரை சாளரத்திற்கு மூன்று நான்கடி தூரத்தில் இருந்தது. ஆனந்தஸிங் மெதுவாகச் சாளரத்தை மூடிவிட்டு, "நண்பனே பார்த்தாயா

விவகாரம் எப்படி யிருக்கிறது. இதைப்பற்றி என்ன நினைக்கிருய்?" என்ருன்.

விசுவநாதன் "மிக்க சாமார்த்தியமான வேலை. இத்தகையதை நாம் கண்டதில்லை யென்றே கருதுகிறேன்" என்ருன்.

ஆனந்த:—"ஆ! அந்த விஷயத்தில் நான் ஒப்பமாட்டேன். சவம் வண்டியின் கூறைமேல் வைக்கப்பட்டிருந்தது என்பதை எப்போ தறிந்துகொண்டேனே அப்போதே மற்ற விஷயங்களெல்லாம் தாமே வெளியாகின்றன. இதில் பெரிய விவகாரம் சம்பந்தப்பட்டில்லாவிட்டால் இது வரையில் நாம் கண்டறிந்த விஷயங்களனைத்தும் மிக்க அற்பமே. நமக்குக் கஷ்டமிருப்பது இனிமேற்ருன். ஒரு சமயம் நமக்கு உதவி செய்யக்கூடியவை எவையேனும் இங்கு சிக்கலாகும். எதற்கும் பார்ப்போம்" என்ருன்.

அதன்பிறகு இருவரும் அங்கிருந்த படிகளின் வழியாயேறி இரண்டறைகள் இருக்கும் ஒரு இடத்தில் சேர்ந்தார்கள். அவற்றில் ஒன்று போஜன அறை. அதில் விசேஷ சாமானுவது முக்கியமான வஸ்துவாவது ஒன்று மில்லை. மற்றென்று படுக்கையறை. அதிலும் ஒன்றுமில்லை. அவற்றின் பக்கதிலிருந்த அறையில் தான் ஏதேனும் அகப்படும்போல் தோன்றியது. ஆனந்தஸிங் அந்த இடத்தைச் சோதனைசெய்யத் தொடங்கினுன். அந்த அறையில் எங்கும் புத்தகங்களும் கடிதங்களும் சிதறுண்டுகிடந்தன. அது வாசிக்குமிடம் என்று தெரிந்தது. ஆனந்தஸிங் வரிசையாக அங்கிருந்த பெட்டிகள் அலமாரிகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்ருகத் திறந்து பார்த்தான். அவன் முகத்தோற்றத்தல் அவன் சந்தோஷமடைந்ததாக ஒரு அறிகுறியும் உண்டாகவில்லை.

ஒரு மணி நேரம் வரையில் பார்த்ததும் ஒன்றும் அகப்பட வில்லே.

ஆனந்தஸிங் "அக்கள்ளப்பயல் தனக்கு விரோதமான அத்தாட்சிகளே யெல்லாம் அழித்துவிட்டான். தன்னேக்காட் டிக்கொடுக்கத் தக்க வஸ்து ஒன்றையேனும் அவன் விட்டுச் செல்லவில்லே. அவனிட மிருக்கவேண்டிய ஆபத்தான கடிதங்களே யெல்லாம் அழித்துவிட்டான் அல்லது கையில் எடுத்துக்கொண்டு போய்விட்டான். ஆ! இதோ ஒன்றிருக் கிறது. இதுவே கடைசி சந்தர்ப்பம்" என்ருன்.

ஆனந்தஸிங் இப்போது கூறியது ஒரு சிறு தகரப் பெட்டி. ஆனந்தஸிங் அதைத் தன்னிட மிருந்த உளியாற் றிறந்தான். அதில் சுருணே சுருணேயாகக் கடிதங்களிருந்தன. அவற்றில் சிலவித உருவங்களும் சில அளவுக் கணக்குகளும் இருந்தன. ஆனல் அவை யெதைப்பற்றி யென்றறிய ஒரு விதக்குறிப்புமில்லே. ஆனல் சில வார்த்தைகளால் அவைகள் ஜலமூழ்கிக் கப்பலேப்பற்றியவை யென்று கருதக்கூடிய தாக விருந்தது.

ஆனந்தஸிங் அவைகள் யாவற்றையும் அலட்சியமாக எறிந்துவிட்டான். கடைசியில் ஒரேயொரு கடித உறைதா னிருக்கிறது. அந்த உறைக்குள் கத்திரிக்கப்பட்ட பத்திரி கைத்துண்டுகளிருந்தன. ஆனந்தஸிங் அவற்றை மேஜை மேல் கொட்டிப்பார்த்தான். அப்போது அவன் முகத்தில் குபீலென்று உண்டான பிரகாசக்குறிப்பால் அவனுக்கு ஏதோ திருப்தியான சமாசாரம் கிடைத்தது என்று புலப் பட்டது.

ஆனந்தஸிங் விசுவநாதனே நோக்கி "ஹா! விசுவநாதம் இவை யென்ன? என்ன பார்! வரிசையாய்ப் பத்திரிகை வாயிலாக அனுப்பப்பட்ட சமாசாரங்கள் 'தினசரி தந்தி' என்ற பத்திரிகையிலிருக்கிறது. இரண்டாவது பக்கத்தின்

வலது கோடி மூலையிலேயே பிரசுரிக்கப் படுகிறது. தேதி யில்லா விட்டாலும் இவற்றிலுள்ள சமாசாரங்களால் வரிசைக்கிரமம் தெரிகிறது. இதோ இது தான் முதல் சமாசாரமாக விருக்கவேண்டும்.

"சீக்கிரம் பதில் வருமென எதிர்பார்க்கிறேன். பேரம் ஒப்புக் கொள்ளப்பட்டது. கடிதத்தில் குறித்த விலாசத்திற்கு எழுதவும். பெரியசாமி"—இரண்டாவது சாமாசாரம்—"விவரிக்க மிக்க சிக்கலானது. சரக்கு கைக்கு வந்ததே தொகை தயார் பெரியசாமி"

அதன் பிறகு - "சங்கதி அவசரம். ஒப்பந்தம் பூர்த்தியாகாவிட்டால் பேரம் நிறுத்தப்படும். எப்போது சந்திப்பது? கடித மூலம் அறிவி. பேரம் பிரசுரமூலம் காயம் செய்யப்படும். பெரியசாமி." இதோ கடைசி சமாசாரம்—"திங்கள் இரவு ஒன்பது மணிக்குப் பின். இரண்டு தட்டல். நாம் முட்டுமே. சமுசயம் வேண்டாம். சரக்கை யளித்ததே ரொக்கம் கையில். பெரியசாமி"

என்று வாசித்து விட்டு இது ஒரு பூரணமான பத்திரம். ஒரு முனையில் உத்தமநாதன் இருக்கிறான். மறு முனையிலிருக்கும் ஆளைமட்டும் கண்டு பிடித்து விட்டால்" என்றான்.

ஆனந்தலிங் அவ்வாறு கூறிவிட்டுச் சுமார் பத்து நிமிடங்கள் மௌனமாக ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். பிறகு ஏதோ புது உற்சாகமடைந்தவன் போல் திடீலென்று எழுந்து, "விசுவநாதம்! கடைசியில் அவ்வளவு கஷ்டமிராதென்றே நம்புகிறேன். இப்போது இங்கு நாம் இனிச் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. நாம் நேராய் "தினசரித் தந்தி" என்ற பத்திரிகையின் காரியாலயத்திற்குச் சென்றால் இன்று செய்த கஷடமான வேலைகளின் முடிவை யறியலாகும்" என்றான்.

அவ்வாறே யிருவரும் உடனே அந்த வீட்டை விட்டுப் புறப்பட்டு நேராக "தினசரித் தந்தி" என்ற பத்திரிகையின் காரியாலயத்திற்குச் சென்றார்கள். அச்சமயம் அங்கு முறைப்படி இரவு வேலைசெய்யும் இலிகிதர்களே யிருந்தார்கள். ஆனந்தஸிங் அவர்களிடம் மேற்கண்ட சமாசாரங்களை யார் அனுப்பியது என்று விசாரித்தான். அவர்கள் "யாரேனும் சமாசாரத்தைக் கொண்டுவந்து கொடுத்து அதற்கு நாங்கள் கேட்கும் கூலியையும் கொடுத்து விட்டால் அதிலுள்ள கையொப்பப்படி நாங்கள் பிரசுரம் செய்து விடுகிறோம். அதை விட்டு அதைக்கொண்டு வருபவர்கள் யாரென்று நாங்கள் கவனிக்கவேண்டிய அவசியமுமில்லை: எங்களுக்கு அவகாசமுமில்லை. சமாசாரம் ஆக்ஷேபனைக்குரியதாக இராதவரையில் நாங்கள் பேசாமல் எடுத்துக்கொள்வதே. இத்தகைய சமாசாரங்களைக் கூலிக்குக்கொண்டு வர ஏராளமான ஆட்களிருக்கிறார்கள். அவர்களில் இதை யார் கொண்டு வந்தார்கள் என்று கூறுவது சாத்தியமல்ல" என்றார்கள்.

மறுநாட்காலைப் போஜனம் முடிந்ததே முன் செய்திருந்த ஏற்பாட்டின்படி ஆனந்தஸிங்கின் தமையன் மோகன்ஸிங்கும், துப்பறியும் போலீஸ் இன்ஸ்பெக்டர் இலக்ஷ்மணஸிங்கும் ஆனந்தஸிங்கிடம் வந்தார்கள். இருவரும் வந்து ஆசனங்களிலமர்ந்ததும் ஆவலோடு ஆனந்தஸிங் முகத்தை நோக்கினார்கள். ஆனந்தஸிங் முன்னாள் அவ்விஷயமாகத் தான் செய்த ஆராய்ச்சி முழுமையும் தன் தமையனிடம் கூறினான்.

ஆனந்தஸிங் உத்தமநாதன் வசித்திருந்த வீட்டிற்குள் கள்ளனைப்போல் பிரவேசித்த சங்கதியைக் கூறியபோது மோகன்ஸிங் தலையசைத்து "எங்கள் அதிகாரத்தால் இக்காரியத்தைச் செய்ய முடியாது. இதனால்தான் நாங்கள்

செய்யமுடியாத காரியங்களை நீ செய்து விடுகிறாய். ஆயினும் எப்போதேனும் ஒரு சமயத்தில் கொஞ்சம் அத்துமீறிப் போனால் நீயும் உன் நண்பரும் இக்கட்டில் சிக்கிக் கொள்வீர்கள்" என்றான்.

ஆனந்தஸிங் "தாய் நாட்டிற்கும், இராஜாங்கத்திற்கும், நீதிக்கும் எதையும் தியாகம் செய்யவேண்டியதே - அதிருக்கட்டும். இப்போது இதைப்பற்றி என்ன கருதுகிறீர்?" என்றான்.

மோகன்ஸிங்:—"நீ செய்தது நேர்த்தியான காரியமே. வெகு நேர்த்தியே. இப்போது அகப்பட்ட விஷயங்களைக் கொண்டு நீ என்ன செய்ய உத்தேசிக்கிறாய்?" என்றான்.

ஆனந்தஸிங் மேஜைமேலிருந்த தினசரித்தந்தி என்ற பத்திரிகையை யெடுத்து, "பெரியசாமி இன்று பத்திரிகையில் செய்திருக்கும் பிரசுரத்தைப் பார்த்ீர்களோ?" என்றான்.

மோகன்ஸிங் மிக்க வியப்படைந்து "என்ன? இன்னொரு சமாசாரமா?" என்றான். ஆனந்தஸிங் "ஆம். இதோ இருக்கிறது. 'இன்றிரவு-அதேவேளை: அதேயிடம். இரண்டு தட்டு. மிக்க முக்கியமான விஷயம். உன் சொந்த க்ஷேமமே ஆபத்திலிருக்கிறது. பெரியசாமி'' என்று வாசித்தான்.

அதைக்கேட்ட இலக்ஷ்மணஸிங் மிக்க சந்தோஷத்தால் துள்ளிக் குதித்து, "பேஷ்! அவன் மட்டும் இதேப்படி நடந்து கொண்டால் ஆளைப்பிடித்துக் கொள்ளலாம்." என்றான்.

ஆனந்த:—"நான் அதே யோசனை செய்துதான் இச்சமாசாரத்தைப் பத்திரிகைக்கனுப்பினேன். நீங்கள் இருவரும் தயவுசெய்து எட்டுமணிக்கு எங்களோடு கூட அவ்வீட்டிற்கு வருவதாயின் இச்சங்கதியைப் பற்றிய

மர்மம் பெரும்பாலும் வெளிவந்து விடுமென்று நம்புகிறேன்'' என்றான்.

ஆனந்தஸிங்கிடம் ஒரு விசேஷகுணமுண்டு. அதாவது எவ்வளவு பிரமாதமான விஷயத்தைப்பற்றி அவன் வேலைசெய்து கொண்டிருந்தாலும், அதைப்பற்றி இனிச் சிந்திப்பது அனுவசியமென்று கண்டால் இடையில் அதையடியோடு மறந்துவிட்டு வேறு மிக்க அற்பமான விஷயத்தைப்பற்றி கூட சிந்தித்துக்கொண் டிருப்பான். அன்று பகல் முழுமையும் அவன் கையெழுத்துகளில் வித்தியாசங்களைக் கண்டறியும் விஷயத்தைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தான். ஆனால் விசவநாதனுக்கு இப்பிரமாதமான கொலையைப்பற்றி இன்னும் என்ன விவரம் வெளிவருமோ, இதன் முடிவு என்னவாகுமோ, இரவு என்ன விபரீதம் நடக்குமோ என்ற விஷயங்களையே சிந்தித்துக்கொண்டு சதா பெருங்கலக்கத்தி லிருந்தான். இதனால் ஒவ்வொரு விநாடியும் அவனுக்கு ஒரு யுகம்போ லிருந்தது.

கடைசியில் இராப்போசனம் முடிந்ததும் நால்வரும் புறப்பட்டபோதே விசுவநாதன் மனம் ஒருவித நிம்மதியடைந்தது. இவர்கள் உத்தமநாதன் வசித்த வீட்டினருகிற் சென்று அங்கிருந்த ஒரு மறைவான விடத்தில் நின்றார்கள். கடந்த இரவு ஆனந்தஸிங் திறந்த அவ்வீட்டின் பின்பக்க கதவு பூட்டாமல் அப்படியே விடப்பட்டிருந்தது. விசுவநாதன் வேலியைத் தாண்டிப்போய் அதன் உட்பக்கத் தாழ்ப்பாளை நீக்கி கதவைத் திறந்தபின் ஆனந்தஸிங் மோகன்ஸிங் இலக்ஷ்மணஸிங் மூவரும் உள்ளே சென்றார்கள். குறித்த வேளையாகிய ஒன்பது மணிக்கு நால்வரும் வாசிக்கும் அறையில் உட்கார்ந்துகொண் டிருக்கிறார்கள்.

இவர்கள் மிக்க ஆவலோடு காத்துக்கொண் டிருக்கிறார்கள். நிச்சயமறியாததால் இவர்கள் ஆவல் அளவுகடந்து

தாக இருந்தது. முதலாவது வரவேண்டிய மனிதன் தான் அக்கடிதங்களைக் களவாடிவந்து உத்தம நாதனிடம் விற்றவனென்று மட்டும் திடமாகத்தெரிந்தது. ஆனால் அவன் யாரென்பது தெரியாது. அதோடு அவன் வருவானோ வரமாட்டானோ என்பதும் தெரியாது. ஏனெனில் உத்தம நாதன் ஊரைவிட்டுப் போய்விட்ட சங்கதி யவனுக்குத் தெரிந்திருந்தால் அவன் சந்தேகங்கொண்டு வரமாட்டான். இக்காரணங்களால் அவர்கள் மிக்க மனப்பதைப்போ டிருந்தார்கள்.

மணி பத்தாயிற்று. இலக்ஷ்மணஸிங்கும் விஸ்வநாதனும் அடிக்கடி கடியாரத்தைப் பார்த்துக்கொண்டே யிருக்கிறார்கள். மோகன்ஸிங் நாற்காலியில் சாய்ந்து அறையின்கதவை நோக்கியபடி யிருக்கிறான். ஆனந்தஸிங் நாற்காலியில் நன்றாகச் சாய்ந்துகொண்டு கண்களைப் பாதி மூடிக்கொண்டு உறங்குகிறவன்போல் இருக்கிறான். ஆனால் உண்மையில் அவன் புலன்களே மிக்க சுறுசுறுப்பாய் எச்சரிக்கையிலிருக்கின்றன என்று விசுவநாதனுக்கு நன்றாய்த் தெரியும். கடைசியில் மணி பதினொன்றடிக்கிறது. அச்சமயம் மற்ற பேர்க்குச் சமீபத்தில் ஒரு கோயிலிலிருந்து அடிக்கப்படும் மணிச் சத்தம் மட்டுமே கேட்கிறது. ஆனால் ஆனந்தஸிங் மட்டும் திடுக்கிட்டவன்போல் திடீலென்றெழுந்து அவன் வருகிறான் என்று தாழ்ந்தகுரலாகக் கூறினான்.

உடனே மற்றபேரும் எழுந்தார்கள் ஆனந்தஸிங் கையமர்த்தி உட்காரும்படி சமிக்கை செய்தான். அறையிலுள்ள தீபம் பேருக்குமட்டுமே மினிமினிபோல்தெரிகிறது. வெளியில் ஆள் வரும் காலடிச்சத்தம் கேட்டதும் கதவு தட் தட் என்று இருமுறை தட்டப்பட்டது. ஆனந்தஸிங் சென்று கதவைக் கொஞ்சம் திறந்து கதவின் பக்கமாய்ப் பின்னிடைந்து நின்றான். வந்தமனிதன் நேராய் உள்ளே

நடந்ததும் ஆனந்தஸிங் கதவைமூடித் தாளிட்டுவிட்டு அவன் கூடவே "இப்படி இப்படி" என்று கூறிக்கொண்டே வந்தான். அம்மனிதன் தன் அறையின் மத்தியில் வந்ததும் அங்கு இன்னும் மூவர் இருப்பதைக்கண்டு ஆ என்று கூச்லிட முயன்றதும் ஆனந்தஸிங் அவன் கழுத்தைப்பிடித்து அவனைக்கீழே வீழ்த்திவிட்டான்.

அவன் சமாளித்து எழுந்திருப்பதற்குள் ஆனந்தஸிங் தன் ஜேபியிலிருந்த துப்பாக்கியை யெடுத்துக்கொண்டு தீபத்தைத் தூண்டும்படி விசுவநாதனுக்குக் கூறினன். கீழே விழுந்தபோது அம்மனிதன் தன்முகம் நன்ருய்த் தெரியாமலிருப்பதற்காக அணிந்திருந்த சிறுமுக மூடியும் பெரிய அகன்ற தலையணியும் கழன்றுபோயின. உடனே அவன் முகத்தைக்கண்ட நால்வரும் அடைந்த வியப்பால் சத்தமிட்டார்கள். அம்மனிதன் தளவாடத் தொழிற் சாலையின் காரியாலயத் தலைவனும் களவு நடந்ததால் மரணமடைந்தவனுமாகிய ஸர்தார் ஜீவரத்னம் என்பவனுடைய தம்பியாகிய கர்னல் வேலாயுதம் என்பவன். ஆனந்தஸிங்கும் விசுவநாதனும் முன்னாள் காலையில் ஜீவரத்னம் பிள்ளையைக்காணச் சென்றபோது தன் தமையன் இறந்து போனதாகக் கூறி ஆனந்தஸிங்கிடம் சம்பாஷித்தவன் இவனே.

ஆனந்தஸிங் "விசுவநாதம்! இம்முறை நான் முட்டாளாகவே போய் விட்டேன். ஆம் நான் எள்ளளவுகூட இவன் என்று எதிர் பார்க்கவேயில்லை. ஆயினும் இது ஒரு நல்ல படிப்பினையே" என்ருன்.

கீழே வீழ்ந்தவன் அடைந்த திகிலால் மூர்ச்சையடைந்து விட்டான். நாற்காலியில் இருந்த மோகன்ஸிங், ஆனந்தஸிங் முதலியோர் சத்த மிட்டதைக் கேட்டு யார் அவன் என்ருன். ஆனந்தஸிங் "இவன் தலைவராகிய ஸர்தார் ஜீவரத்னம் பிள்ளையின் இளைய சகோதரன். விவகாரம் இப்

போது விளங்குகிறது. விசாரணையை யென்னிடம் விடும். இவனுக்கு ஸ்மரணை வருகிறது" என்றான்.

உடனே அவனை யங்கிருந்த மஞ்சத்தில் படுக்க வைத்தார்கள். சற்று நேரத்திற்குள் அவன் எழுந்து உட்கார்ந்தான். மிக்க திகிலடைந்த பார்வையோடு நாற்புறங்களிலும் நோக்கினான். தன் கண்களையே நம்பாதவன் போல் நெற்றியைப் பிடித்துக்கொண்டு மறுபடி பார்த்தான். கடைசியில் "இதென்ன சமாசாரம். நான் இங்கு உத்தமநாதம் பிள்ளையைக் காண வந்தேன்" என்றான்.

ஆனந்த:—"ஓ கர்னல் வேலாயுதம் எல்லா சங்கதியும் வெளியாய்விட்டது. நமது நாட்டுமனிதன் இத்தகைய காரியத்தை யெப்படிச் செய்யத் துணிந்தான் என்பதே மிக்க வியப்பாயிருக்கிறது. ஆயினும் உனக்கும் உத்தமநாதனுக்கும் இருக்கும் சம்பந்தமும், உங்களுக்குள் நடந்த சமாசாரங்களும் யாவும் எங்களுக்குத் தெரிந்தே யிருக்கின்றன. அவ்வாறே கொட்டூர் வரதப்பன் கொல்லப்பட்ட சங்கதியும் தெரியும். இன்னும் சொல்ப தகவல்களே வேண்டும். இப்போது நீ மனஸ்தாபப் பட்டு எல்லாச்சங்கதிகளையும், அதாவது நாங்கள் இன்னும் அறியவேண்டிய சங்கதிகளைக் கூறிவிட்டால் நீ செய்த காரியத்திற்குக் கொஞ்சமேனும் ஈடு செய்ததாகும்" என்றான்.

யாவும் கேட்ட அம்மனிதன் அடடா என்று கூறிவிட்டு சிரசின்மேல் கரங்களை வைத்துக்கொண்டு மௌனமாயிருந்தான்.

ஆனந்த:—நான் உண்மையாய்க் கூறுகிறேன். ஒவ்வொரு தகவலும் எங்களுக்குத் தெரிந்தே யிருக்கிறது. உனக்குப் பணம் வேண்டியது அவசியமாயிருந்தது. உன் தமையனிட மிருந்த சாவிகளின் அச்சு எடுத்துக்

கொண்டு போய் வேறே கள்ளச்சாவிகள் செய்து கொண்டாய். உத்தமநாதனோடு அப்படங்களைப் பற்றி பேரம் பேசினாய். உனக்கும் அவனுக்கும் சம்பாஷணை தினசரி தந்தி சமாசாரம் என்ற பத்திரிகையின் மூலமாக நடந்தது. திங்கள் இரவு மூடுபனியில் மறைந்து நீ தொழிற்சாலை காரியாலயத்திற்குச் சென்றாய். கொட்டூர் வாதப்பன் நீ காரியாலயத்தினருகிற் செல்லும்போது உன்னை யெவ்வாறோ பார்த்து விட்டான். உன்மேல் முன்பே அவனுக்குச் சந்தேக மிருந்ததோ என்னமோ உன்னைத் தொடர்ந்து வந்தான். நீ யக்கடிதங்களை யெடுப்பதைப் பார்த்தான். ஆனால் அவன் கூச்சலிடவில்லை. ஒரு சமயம் நீ யவற்றை யுன் தமயனிடம் கொண்டு போவாயோ என்னமோ வென்று கருதியிருப்பான். ஆகையால் அவன் உத்தமர்கள் நடக்கையின்படி தன் காதலியைக் கூட மூடுபனியில் விட்டுவிட்டு தன் கடமை யொன்றையே கருதி உன்னைத் தொடர்ந்து இதே வீட்டிற்கு வந்தான். இங்கு வந்து உனக்கும் உத்தமநாதனுக்கும் குறுக்காய் வந்தான். அதன்மேல் நீ செய்த தேசத்துரோகத்தோடு மிக்க பயங்கரமான கொலைக் குற்றமும் செய்தாய்........." என்றதே,

கர்னல் வேலாயுதன் துடிதுடித்து, "அய்யோ அய்யோ, நான் கொலை செய்யவில்லை. கடவுள் அறியக் கூறுகிறேன். சத்தியமாய் நான் செய்யவில்லை." என்று அலறினான்.

ஆனந்தஸிங் "அப்படியாயின் கொட்டூர் வாதப்பனுடைய சவம் இரயில் வண்டியின் கூரைமேல் போடப்படுமுன் அவனுக்கு மாரணம் எப்படி நேர்ந்தது என்பதை யொளிக்காமல் கூறு" என்றான்.

---

## 6-வது அத்தியாயம்.

கர்னல் வேலாயுதன்:—"அய்யா! நான் உண்மையாய் நடந்த சங்கதியைக் கூறிவிடுகிறேன். உண்மையை யொப்புக் கொள்ளுகிறேன். இப்போது நீ கூறிய சங்கதிகளெல்லாம் நீ கூறியபடியே நடந்தது உண்மை. எனக்கு ஒரு கடனால் மானம் போய்விடும் போலிருந்தது. எனக்குப் பணம் மிக்க அவசரமாய் வேண்டியிருந்தது. இந்த உத்தமநாதன் எனக்கு ஐயாயிரம் பவுன் கொடுப்பதாகக் கூறினான். ஆபத்திலிருந்து தப்பலாமென்று இந்த வேலையைச் செய்யத் துணிந்தேன். ஆனால் கொலை-கடவுளே! நான் நினைத்தவனே யல்ல. அது வரையில் நான் பூரண நிரபராதியே" என்றான்.

ஆனந்தஸிங்:—"சரி. அப்படியானால் நடந்த சங்கதியென்ன கூறு" என்றான்.

கர்னல் வேலாயுதன்:—நீ கூறியபடி வரதப்பனுக்கு முன்னாடியே யுண்டாகியிருந்த சந்தேகத்தால் தான் என்னைத் தொடர்ந்து வந்தான். இந்த வீட்டின் வாயிற்படி யருகில் வந்து நிற்குமட்டும் எனக்கு அச்சங்கதி தெரியவே தெரியாது. மூடுபனி நிறைந்திருந்தது. மூன்றுகஜ தூரத்திலிருப்பவர்களைக் காணமுடியாது. நான் இங்கு வந்து கதவைக் குறிப்பின்படி இருமுறை தட்டினேன். உத்தமநாதன் உடனே வந்து கதவைத் திறந்தான். அச்சமயம் வரதப்பன் எங்கள் இருவர்க்கும் இடையில் நுழைந்து, "இக்கடிதங்களை யென்ன செய்யப்போகிறீர்கள்?" என்றான்.

உத்தமநாதன் கையில் ஒருபலம் பொருந்திய குட்டைக் கழி வைத்துக்கொண்டிருந்தான். அவன் அதை யெப்போதும் வைத்துக்கொண் டிருப்பது வழக்கம். வாதப்பன்

வீட்டிற்குள் நுழைந்ததே உத்தமநாதன் அக்கழியால் அவன் சிரசின்மேல் அடித்தான். அதனுல் இரண்டொரு நிமிடங்களில் மரித்தான். அதன்மேல் நாங்களிருவரும் இன்னது செய்வதென்று தெரியாமல் விழித்தோம். உத்தமநாதன் சற்று நேரம் சிந்தித்து "பின்பக்கம் சாளரத்திற்கு நேராய் பூமியின் கீழ்செல்லும் இரயில் வண்டித்தொடர் வந்து நிற்கிறது. சவத்தை யதன்மேல் பக்குவமாய்ப் போட்டுவிடலாம்" என்று ஆலோசனை கூறினுன். முன்னே நான் கொண்டுவந்த கடிதங்களைப் பார்த்து "இவற்றில் மூன்று மிக்க முக்கியமானவை. அவைகள் என்னிடமிருக்க வேண்டும்" என்ருன். நான் "அய்யோ! அது முடியாத காரியம்-நாளை காலை யிவை யப்பெட்டியிலில்லாவிட்டால் பெருங் குழப்பமுண்டாய் விடும்" என்றேன்.

உத்தமநாதன் 'இல்லை யில்லை அந்த மூன்றிலுந்தான் முக்கியமான தகவல்கள் இருக்கின்றன. அவை மிக்க சிக்கானவை. அவற்றின் நகலெடுக்க முடியாது' என்ருன்.

நான் அப்படியாயின் யாவும் இரவு என் கூடக்கொண்டு போகப்பட வேண்டியதே யென்றேன். அவன் சற்றுநேரம் சிந்தித்துக் கடைசியில் "ஆ கண்டுபிடித்து விட்டேன். இந்த மூன்றையும் நான் வைத்துக்கொள்கிறேன். மற்ற எழையும் இறந்தவன் ஜேபியில் வைத்துவிட்டால் இந்த விஷயமே அவன்மேல் சாரும். இது நேர்த்தியான ஆலோசனை" என்ருன். எனக்கு அக்கலவரமான வேளையில் வேறு யோசனை புலப்படவில்லை. அவ்வாறே யொப்புக்கொண்டேன்.

நாங்கள் அரைமணி நேரம் காத்திருந்தபின் ஒரு இரயில் வண்டித்தொடர் வந்து சாளரத்திற்கு நேராய் நின்றது. மூடுபனியால் எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. ஆகவே நாங்கள் கஷ்டமில்லாமல் சுலபமாகவே சவத்தை யொரு

வண்டியின் கூரைமேல் மெதுவாய் விட்டுவிட்டோம். அதற்கு முன்பே உத்தமநாதன் அந்த ஏழு கடிதங்களையும் அச்சவத்தின் சேபியில் சொருகிவிட்டான். இதுவே நான் கடைசியாக அதைப்பற்றிக் கண்ட விஷயம்" என்றான்.

ஆனந்த—"உன் தமையனார்?" என்றான்.

வேலாயுதன்:—"அவர் ஒன்றுமே பேசவில்லை. ஒரு முறை நான் அவர் சாவிகளைக் கையில் வைத்திருந்தபோது அவர் பார்த்தார். அவர் சந்தேகப்பட்டிருப்பாரென்றே நான் நினைக்கிறேன். ஆனால் அவர் ஒன்றும் கூறவில்லை. இந்த விஷயத்தால் உண்டான மன வருத்தத்தாலேயே இருதயம் பிளந்து அவர் இறந்தார். அவர் கண்களிலிருந்த பார்வையால் அவருக்கு என் மேற் சந்தேகமுண்டாகி யிருந்ததென்றே நான் நம்புகிறேன். அவர் மறுபடி தலைநிமிரவில்லை யென்பது நீங்களறிந்த விஷயமே" என்றான்.

சற்று நேரம் ஒருவரும் பேசவில்லை. கடைசியில் மோகன்ஸிங் பேசத் தொடங்கி, "நீ உன்னால் கூடியவரையில் இப்போது இதற்கு ஈடு செய்யலாகாதா? அதனால் உன் மனச்சாட்சிக்குச் சற்றேனும் நிம்மதியுண்டாகும். அதோடு உன் தண்டனையும் குறையும்" என்றான்.

வேலாயுதன்:—நான் எவ்விதமாக ஈடு செய்யலாகும்?" என்றான்.

மோகன்ஸிங்:—"உத்தமநாதன் இப்போது எங்கிருக்கிறான் என்பது தெரியுமல்லவா?" என்றான்.

வேலாயுதன்:—"அவன் இருக்கிற இடம் இன்னதென்று திடமாக எனக்குத் தெரியாது. ஆனால் தனக்குக் கடிதம் வரைவதாயின் பருதிபுரத்திலுள்ள சுகபோஜன சாலை என்ற ஹோட்டலுக்கு எழுதும்படி கூறினான்" என்றான்.

அதைக் கேட்டதே ஆனந்தஸிங் துள்ளி யெழுந்து "அப்படியாயின் விவகாரம் இன்னும் நமது கையிலிருக்கி றது" என்றான்.

வேலாயுதன்:—"நான் செய்யக்கூடியவை யாவும் செய்ய ஆயத்தமாக விருக்கிறேன். உத்தமநாதன் மேல் எனக்கு அன்பென்பதில்லை அவனே என் அழிவுக்குக் காரணமாயிருந்தான். ஆகையால் அவன்மேல் வஞ்சந் தீர்த்துக்கொள்ள நான் பின்னடையேன்" என்றான்.

ஆனந்த—"பேஷ். அதுதான் சரி. இதோ கடிதம் முதலிய எழுது கருவிகளிருக்கின்றன. நான் கூறுகிறமாதிரி அவனுக்கு எழுது" என்று கடிதம் பேனு எடுத்து அவ னிடமளித்துப் பின் கண்டவாறு எழுதச் செய்தான்:—

"அன்பார்ந்த நண்பருக்கு, நமக்குள் நடந்த விவகாரத் தில் ஒரு முக்கியமான தகவல் குறைவாக விருக்கிறதென்று இதுகாறும் நீர் அறிந்துகொண் டிருக்கலாகும். இப்போது தான் அதைப்பற்றிய படத்தின் நகலைத் தயார் செய்திருக் கிறேன். அதோடு அது பூரணமாய் விடுகிறது. இதைத் தயார் செய்ததில் எனக்கு மிக்க சிரமம் யேற்பட்டது. ஆயி னும் இக்கஷ்டத்திற்காக இன்னும் ஐந்நூறு மட்டும் அளித் தால் போதும். தபால் மூலமாய் விவகாரம் வேண்டாம். இவ்விஷயம் நாம் கருதியபடி அதே ஆசாமி மேல் பூரண மாக வீழ்ந்திருக்கிறது. இச்சமயம் நான் சில நாட்கள் இங் கில்லாதிருந்தால் சந்தேகத்திற் கிடமாகும். ஆகையால் பக்குவமாய் நடந்துகொள்ள வேண்டும். பொன் நாணயமும் நோட்டுமே. வேறு உண்டி பாபத்து முதலியவை வேண் டாம். நான் நாட்டை விட்டுவந்தால் சந்தேகமுண்டா கும். இன்றேல் அங்கு வர மிக்க விருப்பமே. இச்சம யம் எள்ளளவு சந்தேகத்திற்கும் இடமளிக்கலாகாது. ஆகை யால் இன்று மூன்றாவது நாள் இந் நகரத்தில் சவுக்கு வீதி

யிலிருக்கும் இராஜ வாசம் என்ற ஹோட்டலின் வாசகசாலை அறையில் சரியாகப் பகல் பனிரண்டு மணிக்கு உனக்காகக் குறித்த அக்கடிதத்தோடு காத்துக் கொண்டிருப்பேன். எங்கள் நாட்டு நாணயங்களாகவே யிருக்கவேண்டுமென் பதை மறக்க வேண்டாம்"

இவ்வாறு எழுதி கையொப்ப மிடப் பட்டதும் மேல் விலாசமும் எழுதியாயிற்று. ஆனந்தஸிங் அதை வாங்கிக் கொண்டு தானே எடுத்துப் போய்த் தபாலில் போட ஜேபி யில் வைத்துக் கொண்டபின் கர்னல் வேலாயுதனை நோக்கி "கர்னல் இப்போது சனிவாரம் பனிரண்டு மணிவரையில் நீ எங்களோடு கூட இருப்பதே நமக்குள் சந்தேகத்திற் கிடமில்லாமல் நிம்மதியை யுண்டாக்கும்" என்றான். வேலா யுதன் அவ்வாறே யொப்புக் கொண்டான். அவன் வீட் டிற்குத் தகுந்த சாக்குக் காட்டி யொரு கடிதம் அனுப்பப் பட்டது.

சனிக்கிழமை காலை சுமார் பத்துமணிக்கு ஆனந்தஸிங் மோகன்ஸிங் இலக்ஷ்மணஸிங் விசுவநாதன் கர்னல் வேலா யுதம் ஐவரும் இராஜவாசம் என்ற ஹோட்டலின் ஒரு அறை யில் உட்கார்திருக்கிறார்கள். அந்த அறை வாசகசாலை யறைக்குப் பக்கத்தறை. ஆனந்தஸிங் முன்னடியே அன்று பகல் மறு உத்தரவுவரையில் வாசகசாலை யறைக்குள் தான் சமிக்கை செய்யும் ஆளைத்தவிர வேறு ஒருவரையும் விட வேண்டாம் என்று ஏற்பாடு செய்திருந்தான். சரியாய்ப் பத் தரை மணிக்குத் தான் பரிதி புரத்திலிருந்து வரும் பிரயாணி களை யேற்றி வரும் இரயில் வண்டித் தொடர் சவுக்கு வீதிக் கருகிலுள்ள ஸ்டேஷனுக்கு வருகிறது.

மணி பனிரண்டடிக்கப் பத்து நிமிடம் இருக்கும் போது ஹோட்டல் வேலைக்காரன் போல் உடையணிந்

திருந்த ஒருவன் துரிதமாய் இவர்களிருக்கும் அறைக்குள் வந்து ஆனந்தஸிங்கை நோக்கி "வந்து விட்டான். தனியாகவே நடந்து வருகிறான். கொஞ்சம் மாறுவேட மணிந்திருக்கிறான். பத்து நிமிடங்களில் வந்து சேருவான்" என்றான்.

உடனே ஆனந்தஸிங் விஸ்வநாதன் இலக்ஷ்மணஸிங் வேலாயுதன் நால்வரும் வாசக சாலைக்குச் சென்றார்கள். வேலாயுதம் மட்டும் அங்கிருந்த ஒரு மேஜையி னெதிரில் உட்கார்ந்து ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருப்பவன் போல் அபிநயித்தான். ஆனந்தஸிங் முதலிய மூவரும் அங்கு இருந்த ஒரு பெரிய அலமாரியின் முன் இருந்த திரைக்குப் பின் மறைந்து நின்றார்கள். கதவு சும்மா மூடப்பட்டது.

86507

சுமார் கால்மணி நேரங்கழித்து உத்தம நாதன் ஹோட்டலுக்குள் நுழைந்தான். அவன் கையில் ஒரு தகரப் பெட்டியிருந்தது. அவன் உள்ளே நுழைந்ததும் நேராய் ஹோட்டல்காரனிடம் சென்று வாசகசாலையெங்கே யிருக்கிறது? என்றான். ஹோட்டல்காரன் உடனே அவனை யழைத்துப் போய் வாசகசாலை யறையின் வாயிற்படி யருகில் விட்டு விட்டுப் பின் தங்கினான். உத்தமநாதன் கதவைத் திறந்ததும் உள்ளே மேஜை யெதிரில் கர்னல் வேலாயுதன் தனியே யிருப்பதைக் கண்டதும் முக மலர்ச்சியோடு உள் நுழைந்து கதவை மூடிவிட்டுச் சென்று கர்னல் எதிரிவிருந்த நாற்காலியிலுட்கார்ந்து பெட்டியைக் கீழே வைத்துவிட்டு "ஆயத்தமாய் வந்திருக்கிறாயா?" என்றான். கர்னல் "ஆகா! அதைப்பற்றி யொன்றுமில்லை. இந்த விஷயத்தால் இரண்டு கொலை நேர்ந்ததே என்மனதிற்கு மிக்க வருத்தத்தை யளிக்கிறது" என்றான்.

புதிய நாவல்!  பெருகும் ஆவல்!!

நாவல் வாசிக்கும் நண்பருக்கு நல் விருந்து

# மாதவி * * மாதவன்

அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவா கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. விலை ரூ. 1—0—0

ஆனந்தபோதினிச் சந்தாதாரர்க்கு 30-7-26 வரையில் அணா 12.

---

# இரத்தினபுரி இரகசியம்.

## ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

ஆரணி குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இதில் மிக்க ஆச்சரியமுள்ளவையும், நெஞ்சு திடுக்கிடக் கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக் கூடியவையுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. இங்ஙனம் பலவித நடவடிக்கைகளுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலௌகீக ஆசார விஷயங்களெல்லாம் ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமா யிருக்கின்றனவென்று மட்டும் கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0  2-ம்பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# "ஆனந்தபோதினி"

## ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஹு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும்விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மை யொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப் படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 48 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரிக்காப்பி இனாம்.

### ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூபா | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் … | 4 | 0 | தினகரசுந்தரி | 1 | 0 |
| பவளத்தீவு 2-பாகமும் … | 3 | 0 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| கற்கோட்டை … | 2 | 0 | பத்மாஸனி … | 0 | 14 |
| மின்சார மாயவன் … | 1 | 8 | வீரநாதன் … | 0 | 12 |
| தேவசுந்தரி … | 1 | 4 | குணசுந்தரன் … | 0 | 12 |
| கனகபூஷணம் 2-பாகமும் … | 3 | 8 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| சுவர்ணாம்பாள் … | 0 | 12 | கமலசேகரன் … | 1 | 12 |
| ஆனந்தஸிங் .. | 2 | 0 | பூங்கோதை … | 0 | 10 |
| மதனபூஷணம் … | 1 | 0 | இந்திராபாய் … | 2 | 8 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் … | 9 | 10 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| | | | லோகநாயகி | 1 | 0 |

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press Madras.